# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 39-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### மத்திய இலவசநூல்நிலையம்

யாழ்ப்பாண நகரசபையின் விசேஷ கூட்டம் ஒன்று அன்றுமாலை நடைபெற்று, அதிலே யாழ்ப்பாணநகரசபை அமைக்கத் தொடங்கியிருக்கும் மத்திய இலவசநூல் நிலையகட்டடத்தை மேற்பார்வையிடும்பொறுப்பை இந்திய சிற்பியான திரு. வி. எம். நரசிம்மன் அவர்களிடம் ஒப்படைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### போலிசருக்குச் சம்பளஉயர்வு

பொலிஸ்காரர், சார்ஜன்மார், உதவி இன்ஸ்பெக்றர்மார், இன்ஸ்பெக்றர்மார் ஆகியோரின்சம்பளங்கள் இம்மாத முதல் உயர்த்தப்பட்டுள்ளன. பொலிஸ்காரருக்குப் 15ரூபாவும், சார்ஜன்மாருக்கு 35ரூபாவும, உதவிஇன்ஸ்பெக்றர்மாருக்குப் 10ரூபாவும், இன்ஸ்பெக்றர்மாருக்கு 30ரூபாவுமாகக் கூடியசம்பளம் வழங்கப்படவிருக்கிறது.

### நகரசபைத் தேர்தல்

யாழ்ப்பாண நகரசபையின் புதிய தேர்தல்சம்பந்தமாய் அபேட்சகர்கள் தங்கள் நியமனபத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டியதினம் இம்மாதம் 26-ந் திகதி சனிக்கிழமையாகும். தேர்தல் கார்த்திகைமாத இறுதியில் அல்லது மார்கழிமாத முதல்வாரத்தில் நடைபெறும்போல் இருக்கிறது. ஒவ்வோர் வட்டாரத்துக்கும் அபேட்சகர்களாக இருவர், மூவர், நால்வர்தானும் மூன்வந்து வாக்காளரைச் சந்திப்பதிலும், வாக்குக்கேட்பதிலும் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றார்கள்.

### இலவச பனம்விதைகள்

முரசுமோட்டை, உருத்திரபுரம், ஐயந்நகர்போன்ற குடியேற்றப்பகுதிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கென்று சுமார்ஒருலட்சம் பனம்விதைகள் கிளிநொச்சிக்கமத்தொழிற் போதனாசிரியர் திரு. ஏ. யோசெவ் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கின்றன. அனுப்பப்படவிருந்த பனம்விதைகள் இரண்டுலட்சம்என்றும், தற்போது ஒருலட்சமே அனுப்பப்பட்டுள்ளதென்றும், எஞ்சியஒருலட்சம்விதைகளும் விரைவிலே அனுப்பிவைக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

### கடற்தொழில்பயிற்சி நிலையங்கள்

மீன்பிடிக்கும்தொழிலிலே யந்திரப் படகுகள் உபயோகிப்பதைப் புழக்கத்துக்குக் கொண்டுவரக் கைத்தொழில்-கடற்தொழில்மந்திரி காரியாலயம் முயன்றுவருகிறது. அதனால் மீன்பிடிக்கும்தொழிலில் பயிற்சியளிக்கும் நான்குநிலையங்கள் இலங்கையில் அமைக்கப்படவிருக்கின்றன. இவற்றிலொன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும். இந்தப்பயிற்சிநிலையங்கள் மீன்பிடிகூட்டுறவுப்பகுதிகளின் மேற்பார்வையிலே பயிற்சியளிக்க விருக்கின்றன. இந்தப்பயிற்சிநிலையங்கள் படித்துவிட்டு வேலையின்றித்திரியும் வாலிபர்கள் நவீனமுறையான மீன்பிடிதொழிலில் ஈடுபடுவதற்குத்தூண்டுவதான கல்வி புகட்டுமெனக் கைத்தொழில்-கடற்தொழில்மந்திரி கூ[illegible]கின்றார்.

### திரு. ஏ. ஆர். மனுவேற்பிள்ளை, ஜே.பி.

அச்சுவேலிக் கிராமச்சங்க தலைவரான திரு. ஏ. ஆர். மனுவேற்பிள்ளை அவர்கள் ஜே. பி. எனப்படும் சமாதான நீதிவானுக நியமனம்பெற்று யாழ்ப்பாண மஜிஸ்றேற் திரு. பி. ஜி. எஸ். டேவிட் அவர்கள் முன்னிலையில் சென்ற 2-ந்திகதி புதன்கிழமை விசுவாசப்பிரமாணஞ் செய்துகொள்ளலாயினர்.

### பணிப்பெண்ணுக்குக் கொடுமை

சாவகச்சேரியைச் சேர்ந்தவர்களும், அரசாங்கஊழியர்களுமான ஓர் கணவனும், மனைவியும், இவர்களின்மகளுமாகிய மூவருஞ்சேர்ந்து தங்கள் வீட்டு வேலைகாரியான பதினுன்குவயதுச்சிறுமியைக் கொடுமையாகநடத்திய பரிதாபகரமான சம்பவம்ஒன்றுபற்றிப் பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர். இந்த வேலைகாரச்சிறுமி பொலிசருக்குச்செய்த முறையீட்டிலே மூவருள்ளும் தகப்பன் ஈவிரக்கமின்றி என்னைத்தாக்கினுர்; தாய் கொதிநீரை என்மேல்ஊற்ற, மகள் ஒருகொள்ளியினுல் என்னைச்சுட்டாள்; நான் அயலிலிருந்த ஒருவரிடம்சென்று முறையிட்டேன்; அவர்என்னைப் பொலிசரிடம் கொண்டுவந்தார்என்று அவள்தெரிவித்திருக்கின்றுள். சிறுமியின் உடல்முழுவதும் சிராய்ப்புக்காயங்களும், வீக்கங்களும், நெருப்பினுல் சூடிட்டபுண்களும் காணப்படலாயின. தற்போது சிறுமி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றுள்.

### குழப்பத்தில்முடிந்த கூட்டம்

பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்ப்பதற்காகச் சென்றசனிக்கிழமைமாலை வெலிமடைப் புதிய எம். பி. திருமதி குஸுமா இராஜரத்தினுவும், அவர்கணவர் திரு. கே. எம். பி. இராஜரத்தினுவும் நுவரெலித் தபாற்கந்தோருக்கு அருகாமையில் நடத்தியகூட்டம் குழப்பத்தில்முடியலாயிற்று. அக்கூட்டத்தில் பேச்சாளர் பேசஎழுந்ததும், அங்குகுழுமியிருந்தவர்கள் சப்தம்போட்டுக் கேலிசெய்து சாணி, கூழ்முட்டை, கக்காளிப்பழம், கற்கள் ஆகியனகொண்டு அவர்களை முழுக்காட்டினர். வெடிகளும் தீரப்பட்டன. அதில்பேச்சுநிகழ்த்திய புத்தபிக்குகள்மீதும், திருமதி குஸுமா இராஜரத்தினுமீதும் கூழ்முட்டைகளும், சாணியும்விழுந்தன. மக்கள் போட்ட கூச்சல்கள்மத்தியிலே "பண்டாரநாயகா இந்நாட்டிற்குத்துரோகஞ் செய்துவிட்டார்; உங்கள்பெண்களையும், பிள்ளைகளையும் தொண்டமானுக்கும், அசீஸிற்கும் காட்டிக்கொடுத்துவிட்டீர்களா?" என்பனபோன்ற சப்தவெடிகளேகேட்டன. இருமணித்தியாலமாக நடைபெற்றகூட்டத்தின் பெரும்பகுதியெல்லாம் அங்கு கூடியிருந்து கூச்சல்போட்ட மக்களைத்திட்டுவதில்தான் செலவழிந்ததாம்.

### கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வேலைசெய்யவிரும்பும் தமிழ் அல்லது ஆங்கில எஸ். எஸ். சி., அதாவது சிரேஷ்ட தராதரப் பத்திரம் உள்ளவர்களுக்கு யாழ்ப்பாணக் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையிலே வருகிற கார்த்திகை 4-ந் திகதி முதல் மூன்றுமாத காலத்துக்குப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. அதனுல், பயிற்சிபெற விரும்புகிறவர்கள் பாடசாலை அதிபருக்கு நிகழும் ஐப்பசிமாதம் 20-ந் திகதிக்குமுன் விண்ணப்பஞ் செய்துகொள்ளவேண்டும்.

### கொழும்பிலும் பார்த்தனர்

சோவியற் ரூஷியாவினுல் சென்ற வெள்ளிக்கிழமை வானமண்டலத்தில் செலுத்திவிடப்பட்ட செயற்கைச்சந்திரன் சென்ற செவ்வாய்க்கிழமை மாலை 5-45 மணிக்குக் கொழும்புநகரின் மேற்குக் கடற்கரைக்கு மேலாகக் காணப்படலாயிற்று. பெருந்திரளான மக்கள் அதனைப்பார்த்துப் பிரமித்து நின்றூர்கள். அந்நகரின் பலபகுதிகளிலும் அநேகர் அன்றுமாலை 5 மணிக்கும், 6-30 மணிக்குமிடையே பூதக்கண்ணுடியின் உதவியின்றி நன்றுக அதனைப்பார்த்ததாய்க் கூறியிருக்கிறூர்கள்.

### அரைலட்சம்ரூபா நஷ்டஈடு

நாரந்தனைக் கிராமச்சங்கத்தலைவராய் இருந்தவரும், புத்தளத்திலே சென்ற 1956-ம்ஆண்டுதைமாதம் 29-ந் திகதியன்று ஓர்கார்விபத்துக்குள்ளாய் இறந்தவருமான திரு. எம். சிவராசாவின் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் ஊர்காவற்றுறையைச்சேர்ந்த திரு. வி. இரகுநாதன்என்பவர் நட்டஈடாக அரைலட்சம்ரூபா அளிக்கவேண்டுமென்று யாழ்ப்பாண உதவிடிஸ்திறிக் நீதிபதி சென்ற 3-ந்திகதியன்று தீர்ப்பளித்திருக்கின்றூர். எதிரியான இரகுநாதன் கவலையீனமாகத் தனதுகாரைச் செலுத்தியதன்மூலம் திரு. சிவராசாவுக்கு மரணம்விளைவித்ததற்காக இந்த நட்டஈடு கோரப்பட்டது. அந்தவிபத்து தவிர்க்கமுடியாத ஓர்விபத்தென்றும், அதனுல் தான் நட்டஈடுஎதுவும்கொடுக்கமுடியாதென்றும் எதிரிசாதித்தார். விசாரணைமுடிவில் நீதிபதி கவலையீனமாகக் காரைச்செலுத்தியதால் விபத்து ஏற்பட்டதெனக்கண்டு முன்சொன்னவாறு தீர்ப்பளித்தார்.

### கொலைகளின் பெருக்கம்

இலங்கையிலேதற்போது கொலைகள் நடைபெறுதநாளே இல்லையெனலாம். இவ்வாண்டிலே தைமுதல் புரட்டாசி ஈறாகவுள்ள ஒன்பதுமாதங்களிலும் 400கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. சென்றவருடத்தின் முதல் ஒன்பது மாதங்களிலும் நிகழ்ந்தகொலைகள் 377. இவ்வருடத்திற்போன்று முன்னெருபோதும் இவ்வளவுகொலைகள் நடக்கவேயில்லையாம். நீண்டகாலச்சச்சரவு, பெண்களால்உண்டாகும் பொறுமை, காணித்தகராறு, மதியீனம் ஆகியனவே கொலைகளுக்குமுக்கியகாரணங்களென்று சொல்லப்படுகிறது.

### சலவைத்தொழிலாளரின் நடவடிக்கை

இரத்தினபுரிப் பட்டினசபை அண்மையிலே அப்பட்டினத்திலுள்ள சலவைத்தொழிலாளருக்குமாதந்தோறும் 2 ரூபா வரிவிதிக்கத் தீர்மானித்தது. அதற்கு ஓர்எதிர்நடவடிக்கையாகச் சலவைத்தொழிலாளர்கள் அப்பட்டினசபைஅங்கத்தவர்களின் குடும்பங்களுக்குச் சலவைசெய்வதில்லையெனத் தீர்மானித்துள்ளனர். அதனுல் பட்டினசபைஅங்கத்தவர்களான பதினெருபேரின் குடும்பங்களும் வருங்காலத்தில் தங்கள்அழுக்குஉடைகளைத் தாங்களே சலவைசெய்யவேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டிருக்கிறது. அங்ஙனம்அவைகள் சலவைசெய்யுமா?

### திரிகோணமலைத் தளம்

திரிகோணமலைக் கடற்படைத்தளத்தை நிகழும் ஐப்பசிமாதம், 15-ந்திகதி செவ்வாயன்று இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கான திட்டங்களெல்லாம் சித்தஞ்செய்யப்பட்டுவிட்டன. இந்தவைபவத்தில் பிரதமர் பண்டாரநாயகாவுடன் பலமந்திரிகளும், பாராளுமன்ற அங்கத்தவர்களும் கலந்துகொள்வார்கள். 15-ந் திகதிகாலை 9-30 மணியளவில் தளம் இலங்கைஅரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதும் கடற்படை மரியாதைகளுடன் வெள்ளைக்கொடி இறக்கப்பட்டு, றோயல்இலங்கைக் கடற்படைக் கொடி. கடற்படைமரியாதைகளுடன் ஏற்றிவிடப்படும். இந்தவைபவத்திற்கென்று முதனுள் 14-ந்திகதிஇரவு கொழும்பிலே கோட்டைஸ்றேஷனிலிருந்து ஓர் விசேஷ றெயின் வண்டியானது அழைப்புகள்பெற்ற சுமார் 90 பிரமுகர்களை ஏற்றிக்கொண்டு திரிகோணமலைக்குச் செல்லவிருக்கிறது.

---

● சோவியற்ரூஷியா பூமியைச் சுற்றிவர மிதத்திவிட்டிருக்கும் செயற்கைச்சந்திரனைத்தயாரித்து வானவெளியில்விடச் சுமார் 40லட்சம்பவுண் செலவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தச்சந்திரன் விஞ்ஞானத்துறையில் சோவியற்ரூஷியா உலகநாடுகளையெல்லாம் மிஞ்சிவிட்டதென்பதை உணர்த்திக்காட்டுவதாக அமெரிக்கவிஞ்ஞானிகள் கருதுகின்றூர்கள்.

---

## 20-10-57 ஞாயிறு
## விசுவாசப்பரப்புதல் ஞாயிறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

### இன்னும் அதிக கன்னியாஸ்திரிமார்

"கன்னியாஸ்திரிதாதிமார் தொடர்ந்து சேவைசெய்யவேண்டும். இன்னும் அதிகமான கன்னியாஸ்திரிதாதிமார் சேவைக்கு அமர்த்தப்படவேண்டும். இலங்கையரானபெண்களைத் தாதிமார் சேவையில்சேர்ப்பதாயிருந்தால் சிறந்த குணமும், பண்பாடும்உள்ளவர்களையே சேர்த்தல்வேண்டும்."

திரு. சி. பொன்னம்பலம்,
முன்னைநாள் யாழ்ப்பாணமேயர்.

### பணத்தை நிலத்தில்

"வருங்காலம் கஷ்டமானகாலம். இந்தநாட்டிலேதான் நாம் பிழைக்க வேண்டிவரும். இந்நிலையில் எமது பிள்ளைகள் பீடியும், சிகறெற்றும், படமாளிகையுமாய்இருப்பதை நாம் அனுமதிக்கக்கூடாது. நாமும் எளியவாழ்க்கை வாழப்பழகவேண்டும் பணத்தை வீணைவிஷயங்களில் செலவிடாது நிலத்தில் விட்டு விளைவைப்பெருக்க வேண்டும்."

திரு. எஸ். அருணந்தி.

### பொறுத்திருக்க வேண்டும்

"திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பெருந்தன்மை வாய்ந்தவர். தூயஉள்ளம் படைத்தவர். அவரதுநேர்மையை எவராலும் சந்தேகிக்கமுடியாது. அவர் நல்லவையென்த் தான் நம்புகின்ற கருத்துகளைத்தான் கொண்டிருப்பார். ஒப்பந்தத்தைப்பற்றிய விபரங்கள்எதுவும் இரகசியமாக வைக்கப்படவில்லை. இந்தப்பொதுப்படையான ஒப்பந்தத்தை உருவாக்கும் சட்டம்வரும்வரை பொறுத்திருக்கவேண்டும்."

பிரதமர் பண்டாரநாயகா.

### ஒப்பந்தம் ஏற்படக்காரணம்

"தமிழ்ப்பேசும்மக்கள் ஒற்றுமையாகவும், உறுதியாகவும் சிங்களம்மட்டும்சட்டத்தை எதிர்த்ததினால் தான் ஒப்பந்தம்செய்யும்நிலைக்குப் பிரதமரைப் பணியவைக்கமுடிந்தது. சிங்களக்குடியேற்றத்தினால் பறிபோகவிருந்த தமிழ்ப்பிரதேசம் மீட்கப்பட்டது. இந்தஒற்றுமையைத் தொடர்ந்து கடைப்பிடித்தால்தான் ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு அரசாங்கத்தை வற்புறுத்தமுடியும்."

திரு. வி. ஏ. கந்தையா,
ஊர்காவற்றுறை, எம். பி.

### உதவியைஉரிமையுடன்பெறவேண்டும்

"தமிழ்மக்கள் கடந்தகாலத்தில் அனுபவித்துவந்தசுகங்களை எதிர்காலத்தில் அனுபவிக்கமுடியாது. அக்காலத்தில் படித்தவர்கள்தொகை குறைவாயிருந்தது. நாம் அரசாங்கத்தின்உதவியை உரிமையுடன் பெறவேண்டுமேயொழிய மன்றாடியோ, முதுகெலும்பில்லாத ஒத்துழைப்பின்மூலமோ பெறக்கூடாது. இலங்கைமுழுவதும் பரந்திருக்கும் தமிழர்கள் இடைஞ்சலின்றிவாழ்வதற்குநீங்கள்யாழ்ப்பாணத்திலிருந்து உதவிசெய்யவேண்டும்."

சேர் கந்தையா வைத்தியநாதன்

### ஒப்பந்தத்தினல் கண்டபலன்

"நடைமுறைக்கருமங்கள் எல்லாவற்றிலும் தமிழ்ப்பேசும்மக்கள் சிங்களம்மட்டும் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளார்கள். பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தம் ஒருதங்குமடமேயன்றி அதனல் தமிழரசுக்கட்சி தனது இலட்சியங்களை அடைந்துவிட்டதாகவோ, கைவிட்டுவிட்டதாகவோ கூறமுடியாது. இந்த ஒப்பந்தம் தமிழ்மொழியை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகமொழி ஆக்கியதோடு தமிழ்ப்பகுதிகளில் சிங்களவர் குடியேற்றப்படுவதைத் தடுத்தும்விட்டது."

டக்டர் ஈ. எம். வி. நாகநாதன்,
தமிழரசுக்கட்சிப் பொதுக்காரியதரிசி.

### காகக்கூட்டில் குயிற்குஞ்சு

"சமஷ்டி ஆட்சிமூலமோ அல்லது ஒற்றை ஆட்சிமூலமோ சமஅந்தஸ்து வந்தபோதிலும் இந்நாட்டில் தமிழ்மக்களுக்கு இடைஞ்சலே இடைஞ்சல்தான். அவர்கள் ஒருவகையாகச் சமாளித்துக் காலந்தள்ளியகாலம் மலையேறிவிட்டது. காகத்தின்கூட்டில்வளரும் குயிற் குஞ்சுகளுக்கு ஏற்படுகிற வில்லங்கநிலை எங்களுக்கு நேர்ந்துள்ளது. இந்நிலையில்நாம் பழம்பெருமை பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. நாவைஅடக்கி முழுநம்பிக்கையுடன் நன்முயற்சி செய்யவேண்டும்."

சேர் கந்தையா வைத்தியநாதன்.

### இன்னெரு தென்னுபிரிக்கா

"பிரித்தானிய ஆட்சிகாலத்தில் இலங்கையில்நிலவிய ஐக்கியமனப்பான்மையானது இலங்கை சுதந்திரம்பெற்றபின்மறைந்து, ஒவ்வொருசமூகத்தவரும் மற்றச்சமூகத்தவரினின்றும் பிரிந்துவாழ எண்ணுகின்றனர். இலங்கை எவ்வித புரட்சிகரமான மாறுதலை அடைந்துவருகிறதுஎன்பதை இவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். இன்னெருதென்னுபிரிக்காவாக இலங்கைமாருமல் ஓர்ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கு அவசியமானநல்லெண்ணம் பல்வேறுசமூகத்தவரிடையேயும் நிலவவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்."

கனம். ஜே. வி. அருளானந்தம்,
சென்யோன்ஸ் கல்லூரியின்
முன்னைநாள் அதிபர்.

### சரிசமமாக நடத்தாதவரை

"அரசாங்கத்திலும், மந்திரிசபையிலும் எல்லாச்சமூகத்தினரின் பிரதிநிதிகளும் இல்லாதநிலையில் எந்தஅரசாங்கமும தற்போதையமுறையில் வெற்றியடையமுடியாது. சிறுபான்மையினருக்குச் சமஉரிமைகொடுத்து அவர்களைச்சரிசமமாக நடத்தாதவரையிலே அவர்களிடமிருந்து ஒத்துழைப்பையோ அல்லது ஐக்கியஉணர்ச்சியையோ எதிர்பார்க்கமுடியாது. சென்றதேர்தலுக்குப்பின் சில அரசியல்கட்சிகள் பூரண வகுப்புவாதக் கட்சிகளாகமாறிவிட்டன. இதன்காரணமாக இலங்கையிலேகட்சிமுறைகிழ்த்தரமாகிவிட்டது. எனவே, இப்போதைய அரசியல் அமைப்பும் பயனற்றதாகிவிட்டது."

ஜனுப் எம். எம். முஸ்தபா,
பொத்துவில், எம். பி.

### புத்தபிக்குகளும் அரசியலும்

"செனற்றர்களாகவும், அரசாங்கத்தில் முக்கியஸ்தர்களாகவும் வருவதற்குப் புத்தபிக்குகள் முயற்சிக்கின்றூர்கள்; புத்தமக்கள் இதைச் சகித்துக்கொண்டிருந்தாலோ, அல்லதுபிரதமர் இவ்விதபிக்குகளின்ஆவலைப் பூர்த்திசெய்ய விரும்பினலோ இலங்கையிலிருந்து புத்தமதம் விடைபெற்றுக்கொண்டுபோய்விடும். சென்றபொதுத்தேர்தலில் மக்கள்ஐக்கியமுன்னணியைப் பிக்குகள் ஆதரித்ததால் அதை மக்கள் அதிகாரத்துக்கு அனுப்பினர். இப்போதோ அரசாங்கம் என்னகொள்கையைப் பின்பற்றவேண்டுமெனப் பிக்குகளே வழிவகுக்கப் பார்க்கிறூர்கள். ஆனல், இது பிக்குகளின் வேலையல்ல."

பண்டித இந்தரத்னதேரோ,
கடுகணுவை.

### ஆறுசிங்களவருக்கு ஒருதமிழர்

"பேராதனைச் சர்வகலாசாலையிலுள்ளதமிழ்ப்பேராசிரியர்களும், தமிழ் மாணவர்களும் இரண்டாம்தரத்தினராகக் கருதப்படுகிறூர்கள். இந்தமாதிரியான இனஒதுக்கல் சம்பவங்கள்தான் தமிழ்ச் சர்வகலாசாலை ஒன்றைக் கோரும்படி எங்களைத்தூண்டுகின்றது. கல்வித்தராதரத்தின் அடிப்படையிலேயே இலங்கைச் சர்வகலாசாலைக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதாக அரசாங்கம் கூறியுள்ளபோதிலும் ஆறுசிங்களவருக்கு ஒருதமிழர்என்ற அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். இது தமிழரின்கலாசாரத்தையும், பொருளாதாரத்தையும் நசுக்குவதாகும். தமிழ்ச்சர்வகலாசாலையில் தமிழும், ஆங்கிலமும் இடம்பெறவேண்டும்."

டக்றர் எம். வித்தியானந்தன்,
இலங்கைச் சர்வகலாசாலைத்
தமிழ்ப்பேராசிரியர்.

### ஓர்சுமைதாங்கி போன்றது

"மொழிப்பிரச்சினை தீர்ந்துவிட்டதெனப் பிரதமர்பண்டாரநாயகா பிரசாரஞ்செய்து திரியலாம். ஆனல், தமிழரசுக்கட்சியைப்பொறுத்தவரை அது இன்னும் தீர்ந்துவிடவில்லை. தமிழ்மொழிக்குச் சமத்துவம் கிடைக்கும்வரை தமிழரசுக்கட்சி தொடர்ந்து போராட்டத்தை நடத்தியேதீரும். சமரசஒப்பந்தத்தின்மூலம் தனிச்சிங்கள சட்டத்தைத் தமிழரசுக்கட்சி ஏற்றுக்கொண்டுள்ளதெனச் சிலர்கூறுவது தவருன வியாக்கியானமேதவிர உண்மையல்ல. அது ஒருஇடைக்கால ஒப்பந்தமேதவிர நிரந்தரமானதல்ல. எமது இலட்சிய நெடுந்தூரப்பிரயாணத்தில் இந்தச்சமரசஒப்பந்தம் ஓர்சுமைதாங்கி போன்றது. அதன்மூலம் வடக்கு, கிழக்குமாகாணங்களில் தமிழ்மொழியில் ஆட்சிநடத்தச் சந்தர்ப்பம்கிடைத்துள்ளது. இதைநாம்மொழிப்போராட்டத்தில்கிடைத்த முதல்வெற்றியென்று தான் கொள்ளவேண்டும்"

திரு. சி. வன்னியசிங்கம், எம். பி.
தமிழரசுக்கட்சித் தலைவர்.

# செபமாலையால் கிடைத்த நன்மரணம்

அன்று வியாகுலத்தாயின் திருநாள். வத காரியங்களிலே அசட்டையாயிருந்த எனதுஉறவினரில் ஒருவர் மரணவஸ்தையாய் இருக்கிறூர் என்பதையிட்டகவலையில் ஆழ்ந்திருந்தேன். இந்தக்கவலையானவேளையிலே அவர் இறைவன் அன்பில் மரிக்கவேண்டுமென்பதே எனது தணியாதஆவல். அதனுல், வியாகுலத்தாயை நோக்கி: "அம்மா தாயே! பாவிகளுக்கு அடைக்கலமே! மரணவஸ்தையாய்க் கிடக்கிற இந்தப்பாவியின்மேல் உமது கிருபைக் கண்களைத் திருப்பியருளும்; அவரை மனந்திருப்பி நல்மரணம் அடையச் செய்தருளும் அம்மா" என்று உள்ள முருகப் பிரார்த்தித்தேன்.

சமீபத்தில்தானே எனதுசெபமாலையை ஆசீர்வதித்துத்தரும்படி பங்குக் குருவானவரிடம் கொடுத்தேன். அவர் அதற்கு நான்குவிதமான பலன்களை அளித்து என்கையில்தந்தார். இந்தச் செபமாலையைக்கொண்டு ஒருவருக்கு நல்மரணவரம் கேட்கப்போகிறேனென்று நான் அவருக்குச் சொல்லவில்லை. அவர் தானகவே "இங்கே கொண்டுவாரும் செபமாலையை; அதன் குருசைப் பார்ப்போம்" என்றூர். நான்கொடுக்க, அவர் குருசுக்குமேலே வேறு இருவகைப்பலன்களுடன் நன்மரணப்பலனையும் அளித்தார். இந்தச் செபமாலையைக் கையிலெடுத்து நன்மரணப் பலனருளிய திருக்குருசைப் பக்தியுருக்கத்துடன் உற்றுநோக்கி: "என் இரட்சகரே! என்தாயே! இந்தப்பாவி மனந்திரும்புவதாகிய பெரிய வரம் கிடைக்கும்படியாக உமதுகளிகூர்ந்த தேவ இரகசியங்களையும், அந்தியதேவதிரவிய அநுமானங்களை நல்லாயத்தத்துடன் பெறத்தக்கதாக உமது வியாகுலதேவ இரகசியங்களையும், உமது அனுக்கிரகங்களுக்குத் தோத்திரமாக மகிமைத்தேவஇரகசியங்களையும் தியானித்து 153 மணிச் செபமாலை ஓதுவேன்" என்று வாக்குப் பண்ணிக்கொண்டு வியாதிக்காரனண்டை சென்றேன். அசைவற்றுப் பிரேதம்போற்கிடந்த வியாதிக்காரனின் மார்பிலே செபமாலையை நம்பிக்கையுடன்வைத்து, நன்மரணப்பலன் அருளிய திருக்குருசை அவர் முத்தமிடக் கொடுத்தேன். அவர் அந்தியதேவதிரவிய அநுமானங்களை இன்னும் பெறவில்லை என்பதை அங்கே கலங்கிக் கொண்டுநின்ற அவருடைய பாரியார் மூலம் அறிந்து, வைத்தியருடைய ஆலோசனையோடு குருவானவரை அழைப்பித்தேன். அறிவற்றுக்கிடந்த வியாதிக்காரனுக்குக் காதுக்குள் சிலபேசியபின் அவஸ்தைப்பூசுதல் மாத்திரம் கொடுத்துவிட்டுக் குருவானவர் சென்றுவிட்டார்.

தேவதாயின்மேல்வைத்த நம்பிக்கையைத் தளரவிடாது, சூழநின்றவர்களுக்கு நான்செய்த வாக்குறுதியைப் பற்றிக் கூறிவிட்டுக் களிகூர்ந்த தேவ இரகசியங்களைத் தியானித்துச் செபமாலையை ஆரம்பித்தேன். இரண்டாவதுதடவையும் குருவானவர் வந்து வியாதிக்காரனின் நிலைமையைப் பார்த்து ஒன்றுஞ்செய்ய இயலாது போய்விட்டார். நேரஞ்செல்லச் செல்ல நிலைமை மிகமோசமாகிவிட்டது. கண்ணீரோடும், அழுகையோடும் பெருமூச்சுகளின்மத்தியில் வியாகுல தேவஇரகசியங்களைத் தியானித்துக் கைகளைவிரித்தவண்ணமாய் இரண்டாவதுசெபமாலையையும் ஓதினேம்.

செபமாலைமுடிந்தது முடியாமுன்னே என்ன அதிசயம்! வியாதிக்காரன் புன்னகையுடன் அருகில்நின்ற தனது மனைவியின்கையை இறுகப்பிடித்துக் கொண்டு "என்னை உத்தரிக்கிறஸ்தலத்துக்குப் போகவிடாதேயும், என்னை உத்தரிக்கிறஸ்தலத்துக்குப் போகவிடாதேயும்" என்று மும்முறைசொன்னூர். "போகவிடமாட்டேன்" என்றுசொல்லிப் "பாவசங்கீர்த்தனஞ்செய்ய விருப்பமா?" என்று கேட்டா. அதற்கு அவர்: "குருவானவர் எனக்குப் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் ஏற்கனவே தந்துவிட்டார்; என்றூலும், பாவசங்கீர்த்தனஞ் செய்வேன்" என்றூர். இதிலிருந்து அவர் அறிவற்ற நிலையில் இருந்தபோதிலும் குருவானவர் காதுக்குள்சொன்னதைக் கேட்டு விளங்கிக்கொண்டாரென அறிந்தோம்.

உடனே குருவானவரும் வந்து சேர்ந்தார். அந்தியதேவதிரவிய அநுமானங்களைத் தக்க ஆயத்தத்துடனும், நல்லறிவுடனும் பெற்றூர். சூழநின்றவர்கள் யாவரும் ஆச்சரியவசத்தாய் "அதிசயம், அற்புதம்" என்று கூவினர். தேவதாயாருக்கு நான்கொடுத்த வாக்கைப்பற்றி ஒன்றுமேயறியாத வியாதிக்காரன் எனதுபெயரை உச்சரித்து "இவ என்னைஆண்டவரிடம் ஒப்படைத்துவிட்டா; இவவுடைய செபமாலை என்னைஆண்டவரிடம் ஒப்படைத்துவிட்டது" என்று மனப்பூரிப்புடன் கூறினூர். ஆனந்தவசத்தாய் அருகில்நின்றவர்கள் யாவரும் முழந்தாட்படியிட்டு மகிமைத் தேவஇரகசியங்களைத் தியானித்து, மூன்றுவது தோத்திர செபமாலையையும் ஓதிமுடித்தோம்.

தேவதாயாரின் அற்புதத்தை எவ்விதம் போற்றுவேன்! எத்தனை காலம் போற்றுவேன்! வியாதிக்காரனும் சில மணிநேரம்வரை நல்லறிவுடன் இருந்து அவசிய கருமங்களைப்பற்றிப் பேசினூர். பின்னர் முந்திய நிலைமை ஏற்பட்டுவிடவே, பிரக்ஞையற்று அசைவில்லாத பிரேதம்போலச் சிலநாட்கள் கிடந்து சென்றவெள்ளிக்கிழமை கர்த்தரில் நித்திரையானூர். இதை வாசிக்கும் அன்பர்களே! செபமாலையின் அற்புதவல்லமையைக் கண்டுகொள்ளுங்கள். மாதாவின் மகிமைக்காக இதைவெளியிடுகிறேன்.

— S. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## மேற்றிராணிமாரின் ஞானவொடுக்கம்

அர்ச். பிரான்சீஸ் அசிஸியார் தமதுசரீரத்திலே அற்புதவிதமாக ஐந்துதிருக்காயஅடையாளங்கள் பதியப்பெற்றஅதேயிடத்தில் அடியிடப்பட்டுள்ள பிரஸ்தாபம்பெற்றலாவெர்ஞசந்நியாச ஆச்சிரமத்தின் மலைகளிலே சமீபத்தில் இத்தாலிமுழுவதிலுமுள்ள மேற்றிராசனங்களிலிருந்துபோன 57அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் ஏழுநாள்ஞானவொடுக்கமொன்றுசெய்யலானார்கள். பொலொஞ்ஞாநகர் அதிமேற்றிராணியாரான கருதினல் லெர்காரோஆண்டவர் ஞானவொடுக்க போதகஞ்செய்தார். இந்த ஆச்சிரமம் எற்றுஸ்கன். அப்பினைன்ஸ் மலையிலுள்ள மொன்ரே டெல்லா வெர்ஞ குன்றில் அமைந்துள்ளது. இங்குதான் அர்ச். பிரான்சீஸ் அசிஸியார் 1224-ம்ஆண்டு ஐந்துதிருக்காயஅடையாளங்களைப் பெற்றுக்கொண்டார்.

## போலிஷ்மக்களின் சமயஉணர்ச்சி

"அரசாங்கம் அலட்சியஞ்செய்ய முடியாத பலம்வாய்ந்த சமய உணர்ச்சி போலிஷ்மக்களிடையே இருந்துவருகிறது" என்று "நோவே டிரோஜி" என்ற போலாந்தின் முதன்மைவாய்ந்த கம்யூனிஸ்த மாதாந்தசஞ்சிகை விசேஷ கட்டுரைஒன்றிலே எடுத்துக்கூறியிருக்கின்றது. அதேவேளையில்தானே சமயநம்பிக்கை யுடையவர்களும், சமயம்எதையுமே அனுசரியாதவர்களுமான இருபாலாரும் "சகிப்புத்தன்மை"யாய் நடந்துகொள்ள வேண்டுமென அந்தக் கட்டுரை மனுப்பண்ணியிருக்கின்றது. இந்தக் கட்டுரை போலாந்தின் தலையாய கம்யூனிஸ்தரான ராடியுஸ் மிரோ வெஸினிஸ்கி என்பவரால் எழுதப்பட்டதாகும். "நோவே டிரோஜி"என்றசஞ்சிகையில் பாப்பரசரையும், கத்தோலிக்க திருச்சபையையும் பகைவிரோதிக்கும் குறிப்புரைகள்யாதுமேயில்லாத கட்டுரைஒன்று பிரசுரமானது இதுவே முதன்முறையாகுமென்று போலிஷ்கத்தோலிக்கமக்கள் கூறுகின்றார்கள்.

## ருஷியமக்களும் வேதவிசுவாசமும்

சமீபத்திலே மஸ்கோவில்நடந்தேறிய உலகஇளைஞர்விழாவுக்குப் பிரித்தானியிலிருந்துபோய்ச் சமுகமளித்தவரான ருஷிய பாஷை பேசும் ஓர் கத்தோலிக்க மாணவர் பிரித்தானிக்குத் திரும்பியதும் யாதுதெரிவித்திருக்கின்றார்? கடவுளைப் பற்றிக் கலந்து சம்பாஷிக்கவும், பேசக்கேட்கவும் ருஷியமக்கள் மிகப்பெரும் ஆவல்கொண்டிருப்பதாகவும், மிகச்சிலர்மாத்திரமே நாஸ்திகர்களாகப் பேசுவதாகவும் தெரிவித்திருக்கின்றார். சமயத்தைப் பற்றிய சம்பாஷணைகள், தர்க்கங்கள் நிகழும்போதெல்லாம் சனக்கூட்டங்கள் அதிகமாகவந்துதிரண்டுவிடுகின்றன; ஆயினும் ஞாபககுறிப்புப்புத்தகம்ஒன்றுடன் ஆராவது ஒருமனிதர் வந்தால் விரைவிலேவிஷயம் மாற்றிவிடப்படுகின்றது; ருஷியபிரிவினைச்சபைக் கோவில்கள் மக்களால் தேங்குகின்றன; கோவில் தண்டல்களில் பெருந்தொகைப் பணம் கிடைத்துவருங்காரணமாகத் தாங்கள் அதிகம்மனரம்மியமாக வாழக்கூடியதாயிருப்பதாக அச்சபைக்குருமார் தெரிவித்தனர்; ஆனால், இந்தக் கோவிற் தண்டல்பணத்தைப் பாடசாலைகளுக்கோ, அல்லதுபிறநாடுகளிலுள்ள மிஷன்களுக்கோ அன்றேல் சுதந்திரஉலகில்நன்மை பெறும் மற்றெந்தநன்மையான காரியங்களுக்கோ நிச்சயமாகவே பாவிக்கமுடியாது" என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

## பாப்பரசரும் தேவநற்கருணையும்

ஸ்பானியதேச கிறனடாநகரிலே சமீபத்தில்நடந்தேறிய நான்காவது தேசிய சற்பிரசாத மகாநாட்டுக்கு வானொலிமூலம் பாப்பரசர் அனுப்பியசெய்தியிலே, "தேவநற்கருணைப்பக்தியானது நாளாந்த வாழ்க்கையிலே பலத்தை மாத்திரமல்ல, ஆனால், சந்தோஷத்தையும், மனப்பாக்கியத்தையும் அருளுகின்றது" என்று ஸ்பானிய மக்களுக்குக் கூறலாயினர். அவர் உலகத்தை ஓர் "ஞான வனாந்தர"த்துக்கு ஒப்பிட்டு, "தேவதிரவியானுமானங்களின்மூலம் உங்களுக்குவருகின்ற இந்தவரப்பிரசாதத்தைவிட வேறுசிவசலம் இல்லை; அவற்றிலெல்லாம் முதன்மையும், மத்தியதானமுமாயுள்ளது வாக்குக்கெட்டாத இந்தப் பரமதேவதிரவியானுமானமே; சாங்கோபாங்கத்துக்கும், உங்கள் கடமைகளையெல்லாம் நிறைவேற்றுதற்கும் ஆவசியம்வேண்டியிருக்கும் சக்தியை இதன்மூலம் கண்டடைகிறீர்கள்; திவ்வியநற்கருணை உங்கள்புத்திக்கு வெளிச்சத்தையும், மனதுக்குச் சமாதானத்தையும், சித்தத்துக்குஅமைச்சலையும், பலத்தையும் கொண்டுவருகிறது; அது உங்கள் ஆத்துமங்களுக்குப் பிறர்சிநேக அக்கினியையும், உங்கள் உ[illegible]வியை மற்றவர்கள் நாடும்போது உங்கள்பாதங்களுக்கு இரக்கைகளையும்கொண்டுவருகிறது" என்றும் கூறலாயினர்.

## வாலிபர்கள் தரிசித்தார்கள்

லண்டன்நகரிலே வசிக்கின்ற 24 வயதுடைய ஜெருட் ஆர்தர், 27 வயதுடைய விக்றர் மிச்செல் எனும் ஐரிஷ் வாலிபர் இருவரும் சமீபத்திலே ஐரோப்பியநாடுகளினூடாக 27நாளில் 2,400மைல் தூரம் பிரயாணஞ்செய்து, அநேகதிருசேத்திரங்களையும், சந்நியாசஆச்சிரமங்களையும், இன்றுஐரோப்பாவில் பிரசித்திபெற்றுவிளங்கும் ஐந்துதிருக்காய அடையாள வரத்தர்களையும் தரிசித்துக்கொண்டு மறுபடியும் லண்டன்நகர்போய்ச் சேர்ந்திருக்கின்றனர். மரியாயின்சேனையாளரான இவ்விருவரும் 35பவுண் கைவசங்கொண்டு, அறிமுகப்படுத்தும் கடிதம் ஒன்றையும் தங்கள் ஞானத் தலைவரிடம் பெற்றுக்கொண்டு, தனதுசரீரத்திலே இரட்சகரின் ஐந்துதிருக்காய அடையாளங்கள் அற்புதமாகப் பதியப்பெற்றுள்ள ஓர்ஜேர்மன் மாதுவான தெரேசா நியூமனைச் சந்தித்து, அவளுடன்பத்து நிமிஷம் சம்பாஷித்தனர். அதன்மேல் இத்தாலியிலுள்ள சான்ஜியோவான்னி றொட்ரன்டோ எனுமிடத்துக்குச்சென்று அங்கே பிரஸ்தாபம்பெற்றுவிளங்கும் ஐந்துதிருக்காய அடையாளவரத்தரான வண. பியோசுவாமியார் காலை 4-45மணிக்குநிறைவேற்றிய திவ்வியபூசைகண்டு, அதன்மேல் அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, அவரின்ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர். தங்கள் பிரயாணத்தின்போது இவர்கள் ரோமாபுரிஉட்பட ஐரோப்பாவின் 28பிரதானநகர்களைத் தரிசித்திருக்கின்றனர்.

## மனந்திரும்பும் ஆயிரம்பேர்

"சுதந்திர தென்கோறியாவிலே முன்னில்லாத விதமாக மக்கள் பெருந்தொகையாக மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொண்டு வருகிறார்கள்; இன்னும்அதிகமான மிஷனரிமார்கள் கிடைக்குமானால் இந்தத் தொகை மேலும்அதிகமாயிருக்கும்" என்று அந்நாட்டிலே குவாங்ஜுநகர் விக்கார் அப்போஸ்தலிக்குவான ஹறோல்ட் ஹென்றி மேற்றிராணியார் தமதுஅமெரிக்கபிரயாணத்தின்போது தெரிவித்திருக்கின்றார். "நம்முடைய விக்காரியத்தில்மாத்திரம் மனந்திரும்பியவர்களாய் மாதம்ஒன்றுக்கு ஆயிரம்பேர் திருச்சபையில் சேர்ந்தவண்ணமிருக்கின்றனர்; மற்றும்சபைகளும் அதிகமான குருமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமாரையும், நிதிஉதவியையும் நமக்குஅனுப்பிவைக்குமானால் இந்தத்தொகை இருமடங்கு, நான்குமடங்காகத்தானும் அதிகரித்துக்கொண்டிருக்கும்; கோறியாவிலே வருடம்ஒன்றுக்கு நூறு பேருக்குக்குறையாமல் மனந்திருப்பாத குருமாரேகிடையாது; குவாங்ஜுவிக்காரியத்தில் ஒவ்வோர்குருவானவரும் வருடம்ஒன்றுக்கு இருநூறுபேருக்குமேல் மனந்திருப்புகின்றனர்" என்றும் அவர்கூறியிருக்கின்றார்.

## கம்யூனிஸ்தஆட்சியின்தந்திரம்

செக்கோசிலவாகியாவிலே கிறீஸ்துவசபைகள் கம்யூனிஸ்த ஆட்சியால் ஆதரிக்கப்பட்டுவருகின்றன. ஆனால், அவைகள் கத்தோலிக்கதிருச்சபைஅல்லாத பிற கிறீஸ்துவ சபைகளே. "பிரித்துஆட்சிசெய்"என்ற தத்துவத்தை மேற்கொண்டு கத்தோலிக்கதிருச்சபையை மறைமுகமாகத் தாக்கும் ஓர் உபாயமாகவே அவைகளுக்கு உதவிசெய்யப்பட்டுவருகிறது. கம்யூனிஸ்தஅதிகாரிகள் "தேசியதிருச்சபை"களை ஆக்குவதற்கும், அபிவிர்த்திசெய்வதற்கும் எவ்வாறு அனுகூலஞ்செய்கிறார்கள்என்பதை "லா குறுவா"என்ற பிரான்சியகத்தோலிக்க தினவர்த்தமானியின் பிரதம ஆசிரியரான வண. அன்ரோனி வென்கர் சுவாமியார் தமது கட்டுரை ஒன்றிலே வர்ணித்துக் காட்டியிருக்கின்றார். "அதன் விளைவாக" புறொட்டஸ்தாந்தசிறு சபைகளும், பிரிவினைச்சபைகளும் ஒன்றுசேர்க்கப்பட்டுச் சுதந்திரமான "பிரிவினைக் கிறீஸ்துவ சபை" ஒன்று நவமாகத் தோற்றியிருக்கிறது; செக்கோசிலவாகியாவில் கத்தோலிக்கசமயம் ஏற்கனவே வெகுவாகப்பந்திக்கப்பட்டுள்ளது; அந்நாட்டின் 19கத்தோலிக்கமேற்றிராணிமாருள்ளும் 12 பேர்சிறைவாசஞ்செய்கின்றனர்; பொஹிமியாவிலும், மொறவியாவிலும் மேற்றிராசனங்களின் பரிபாலனம் ஒன்றுமேதப்பாது கம்யூனிஸ்த ஆட்சிக்குச்சார்பான "சமாதான குருமார்" கையில் இருந்துவருகிறது; ஆயினும் செக்கோசிலவாகிய கம்யூனிஸ்தகட்சியின் நிர்வாக சபைக்குச் சமீபத்திலே சமர்ப்பிக்கப்பட்ட ஓர்அறிக்கையானது, வாலிபமக்களிடம் இருந்துவரும் கத்தோலிக்கசெல்வாக்கின் பலத்தையிட்டு வெகுவாகப் புலம்பிச் சகலமான இளைஞர்களுக்கும் கம்யூனிஸ்தகல்வியூட்டுவதைக் கட்டாயப்படுத்துதற்கான அதிகம்பலமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமெனக் கேட்டிருக்கிறது"என்று சுவாமியார்எழுதியிருக்கின்றார்.

## பிளவுபட்ட மேற்றிராசனம்

ஜேர்மனியிலே பேர்ளின்நகர் மேற்றிராசனத்தின் புதியமேற்றிராணியாராகச் சமீபத்திலே மகாவந். ஜூலியஸ் டவெப்னர் ஆண்டவர் அபிஷேகஞ்செய்யப்படலாயினர். ஜேர்மனியிலே பரிசுத்தபாப்பரசர் ஸ்தானிகராயிருந்தபோது 1930-ம்ஆண்டு வகுக்கப்பட்ட பேர்ளின்மேற்றிராசனத்தில் அரைவாசி சுதந்திர மேற்குபேர்ளினிலும், அரைவாசி கம்யூனிஸ்தகிழக்குபேர்ளினிலும், கிழக்குஜேர்மன் (ருஷிய)பிராந்தியத்திலும் அமைந்திருக்கின்றன. யுத்தத்திலே இதில்அடக்கியிருந்த சுமார் 300கோவில்களில் 56 கோவில்கள்முற்றாகச்சேதமடைந்தன. 36கோவில்கள் மிகமோசமாகச் சேதமடைந்தன. மேற்றிராசனத்தில்அடங்கிய 6,00,000 கத்தோலிக்கரில் 44சதவிகிதமானோர் மேற்குபேர்ளினில் வசிக்கின்றார்கள்.

## இருமேற்றிராணிமாரின் சிறைவாசம்

ஹங்கேரியிலே வாக்ஸ்நகரின் பீற்றறி மேற்றிராணியாரும், வெஸ்பிறெம்நகரின் படாலிக் மேற்றிராணியாரும் அந்நாட்டின் வடகிழக்குப்பகுதியிலுள்ள ஹெஜ்சிஎனும்கிராமத்தில் ஒருங்கேசிறைவைக்கப் பட்டிருப்பதாக ஹங்கேரியஅரசாங்கத்தின் சமய விவகார காரியாலயத்தின் தலைவரான இம்றே மெக்லொஸ் தெரிவித்திருக்கின்றார். அந்தக் கிராமத்தில்பூரணசுவாதீனத்தை அவர்கள் கொண்டிருப்பார்களென்றும் அவர்தெரிவித்திருக்கின்றார். படாலிக்மேற்றிராணியார் அரசாங்கத்தின் எச்சரிக்கைகள்சிலவற்றைப் பறுவாய்பண்ணுதலையிட்டுத் தமது கடமைகளை நிறைவேற்றுது தடைசெய்யப் பட்டிருக்கிறாரென்று சொல்லப்பட்டபோதிலும் அந்தஎச்சரிக்கைகள் எவையென்று சொல்லப்படவில்லை. பீற்றறிமேற்றிராணியார் நான்காம்முறையாகக் கம்யூனிஸ்தபொலிசரால் கைதுசெய்யப்பெற்றுச் சிறைவைக்கப்படலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐப்பசி மாதம்

**அர்ச். செபமாலைமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்**

**பொதுக்கருத்து:** வேத கலாபனைக்குட்பட்டவர்கள் கடைசிவரை விசுவாசத்தில் நிலைத்திருக்கக் கிறீஸ்துவர்கள் விடாதுஉருக்கமாய் வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** பாப்பரசரின் வேதபோதக அலுவல்களுக்குக் கத்தோலிக்கர் அனைவரும் பொறுப்போடு உதவிபுரிவது.


# சத்தியவேத பாதுகாவலன்

1957-ம் ஆண்டு

ஐப்பசி மாதம் 10-ந் திகதி


## 20-10-57 ஞாயிறு

பரிசுத்தபாப்பரசரின் சாதாரணநிருபங்கள் எப்போதும் திருச்சபையின் மகாமுக்கியமான விஷயங்கள்பற்றியே விடுக்கப்படுவது என்றுமுள்ள ஓர்வழமையாகும். ஆனால், இந்தவழமைக்கு மாறாக அவர் சமீப காலத்தில் விடுத்த சாதாரணநிருபம் ஒன்றின்மூலம் அதிகமான செபத்தாலும், தேவஅழைத்தல்களாலும், பொருளுதவியாலும் மிஷன் நாடுகளாகிய வேதபோதகநாடுகளுக்குஒத்தாசைபுரியுமாறு அகில முழுவதிலுமுள்ள கத்தோலிக்க மக்கள் அனைவருக்கும் வேண்டுகோள்விடுக்கலாயினர். இதிலிருந்துவேதபோதகநாடுகளுக்கு ஒத்தாசைசெய்வதுஎத்துணைகாத்திரமானதென்பதை அதிகந்தெளிவாகஅவர் காண்பித்திருக்கின்றார். கடந்தகாலங்களிலே வேதபோதக நாடுகளுக்காகத் தியாகங்கள்செய்துள்ள சகலருக்கும் பரிசுத்தபிதா இந்தச்சாதாரண நிருபத்தின்மூலம் நன்றிதெரிவித்து, இன்னும் அதிகமானதியாகங்கள் செய்வதிலே கத்தோலிக்கமக்களுக்குள்ள பாரதூரமான கடமையைச் சிந்தித்துப்பார்க்குமாறு அவர்களையெல்லாம் தூண்டியிருக்கின்றார். நம்மெல்லோருக்குமே பணக்கஷ்டங்கள் இருந்தபோதிலும் "வேதபோதக அலுவல்களைப் பங்கப்படுத்துவதாகிய ஆதரவற்ற தரித்திரநிலைமையுடன் ஒப்புநோக்குமிடத்து அவைகளெல்லாம் ஒன்றுமின்மையே" என அவர் விளக்கியிருக்கின்றார். "பூமியின் எல்லாப் பகுதிகளிலுமே திருச்சபை வேரூன்றிச் செழித்தோங்கவேண்டுமென ஆசியாத ஓர் கத்தோலிக்கன் அதன்மட்டிலே உண்மையான பக்திபற்றுதலும், விசுவாசமும் உடையவன் அல்ல; ஓர்நாட்டின் கத்தோலிக்க சீவத்துவத்தை வேதபோதக அலுவல்களுக்கென்று அது செய்யக்கூடியதாயிருக்கும் தியாகங்களைக்கொண்டு அளந்துகொள்ளலாம் என்றும் பாப்பரசர் கூறியிருக்கின்றார். வேதபோதகநாடுகளுக்கு உதவி செய்துவருமாறு அவர்தம ஞானமக்களையெல்லாம் ஊக்கப்படுத்தி விடுத்த சாதாரணநிருபத்துக்குப் பின்விசுவாசப்பரப்புதல்ஞாயிறு முதன்முறையாக இம்மாதம் 20-ந் திகதி ஞாயிறுவாரம்வருகின்றது. அதனால், அதைத்தக்கவாறு அனுசரிக்குமாறு தகுந்தவிதமாக ஆயத்தஞ்செய்யவேண்டும். பாப்பரசர் மனுச்செய்துள்ளபடி, செபத்தாலும், தேவஅழைத்தல்களாலும், பொருளுதவியாலும் வேதபோதக நாடுகளுக்குக் கைகொடுக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் ஓர்உத்தமசாதனமாய் விளங்குவது விசுவாசப்பரப்புதற்சபையே. இச்சபையில் கத்தோலிக்கமக்கள் ஒவ்வொருவரும் சேர்ந்து வேதப்பரப்புதலுக்காக மனோற்சாகமாக உழைத்துவர வேண்டும். பாப்பரசரே கூறியிருப்பதுபோல் "வானுலகம் பூவுலகைக்காட்டிலும், நித்தியம் அநித்தியத்தைக்காட்டிலும் பிரமாண்டமாய், எல்லைபிரமாணமற்றதாய் இருப்பதுபோல, விசுவாசப்பரப்புதற்சபைக்குச் செய்யப்படும் தருமமானது மற்றெல்லாத் தருமங்களைக்காட்டிலும் மிகமிக மேற்பட்டதாகும்."

இந்தச்சபை பாப்பரசரின் சொந்தச்சபையாகும். கஷ்டநஷ்டங்களுக் குள்ளாயிருக்கும் மக்களுக்குச் சாந்தியளிப்பதற்கும், ஆத்துமாக்களை இரட்சிப்பதற்குமாக அகிலமுழுவதுக்குமே அவர் செய்துள்ள அதிபிரமாண்டமானதிட்டத்திலே நமது ஞானப்பிதாவாகிய அவருக்கு உதவிசெய்யவேண்டிய பெருங்கடமையைஉணர்ந்து நம்மால் இயன்ற உதவியைச்செய்துவர வேண்டும். "ஆனாலும் அவைகள் இத்தனைபேர்களுக்கு எம்மாத்திரம்?" என்று அன்றொருநாள் அந்திரேஅப்போஸ்தலர் ஆண்டவரைநோக்கிச் சொன்னதுபோல, பூமண்டலமெங்கும் பரந்திருக்கும் வேதப்பரப்புதல் நாடுகளிலே சுவிசேஷம் போதிக்கப்படாமலும், கிறீஸ்துநாதரை இன்னுமேஅறியாமலும் இருந்துவருகின்றபலகோடிக்கணக்கான மக்களுக்கு நாம்செய்யும் பணஉதவி எம்மாத்திரம்? என்று சிந்திக்கிறவர்களும், சந்தேகிக்கிறவர்களும் இன்றையஉலகிலும் இருக்கின்றனர்தான். அந்திரே அப்போஸ்தலர் முன்சொன்னவாறு கேட்டபோது, தன்வசமிருந்த ஐந்துவாற்கோதுமைஅப்பங்களையும், இரண்டுமீன்களையும் ஆண்டவருக்குக் கொடுத்தான் அந்தப்பையன். அவைகளைத் தான்சாப்பிடவென்றே அவன் வைத்திருந்தான். அவன்வைத்திருந்தவைகள் அம்மட்டுந்தான். ஆயினும், அவைகளை ஆண்டவருக்குக்கொடுக்க அவன்பின்வாங்கவில்லை. தனக்கென்று ஒன்றுமேவையாது முழுவதையுமே எசமானிடம் கையளித்தான். அற்புதம்நிகழ்கின்றது. ஆண்டவரின் சர்வவல்லபகரமானது கைகொண்டஅளவான அப்பங்களையும், மீன்களையும் தொட்டதே அவைகள் புதுமையாகப் பலுகிப் பந்தியமர்ந்திருந்த ஐயாயிரம்மக்களைப் பசியாற்றுகின்றன. மீதியானஅப்பத்துண்டுகளால் பன்னிருகூடைகள் நிரப்பப்படுகின்றன. சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட அந்தப்பையனைப்போல நாமும் நடந்துகொள்வோம். அப்புறம் அவரின்வல்லபதிருக்கரம் சிறந்தபலன் அளிக்குமென்க.

## கண்டி யாத்திரை

பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்க்குமுகமாக — அத்தாலே நாடுதுண்டாடப்படுவதைத் தடுத்துவைக்குமாறு பிரார்த்திக்குமுகமாகத் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும், ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளர்களான அவர்கோஷ்டியினரும் தாலதாமாளிகைக்குக் கால்நடைப்பவனியிலே சென்ற 3-ந் திகதி தொடக்கிய கண்டியாத்திரை படுதோல்வியடைந்து விட்டது. களனிப்பாலத்தைக் கடந்ததே கொடும்பாவிகளும், கறுப்புக்கொடிகளும், சவப்பெட்டிகளும் அவர்களைநல்வரவேற்றன. அதன்மேல் அடியெடுத்துவைத்த இடமெல்லாம் கல்லெறிகளும், கலவரங்களும், இரத்தக்காயங்களும், காடைத்தனங்களும் ஒன்றுசேர்ந்துகொள்ளவே பொலிசார்முன்சென்று அவர்களின் யாத்திரையைநிறுத்தி எல்லோரையும் வந்தவழியே திருப்பிவிட்டார்கள். கால்நடைப்பவனியால் கண்டியாத்திரை நின்றபோதிலும், பிந்தஅவர்கள் வாகனங்கள்மூலம் கண்டிக்குச்சென்று அங்கே நேற்றுமுன்தினம் பிற்பகல் தால்தாமாளிகைக்குவெளியே சமுகமளித்தகூட்டமும் கண்டிநகரின் அமைதிக்குப் பங்கம் விளைப்பதாயிற்று. அன்றுநுவரெலியிலும் வெலிமடை இராஜரத்தின தம்பதிகளும், பிக்குகளும், மற்றோரும்பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்க்குமுகமாக நடத்திய கூட்டமும் சாணி, கல், தக்காளிப்பழம், கூழ்முட்டைகள்கொண்டு செய்யப்பட்ட உபசரணையைப்பெற்று முடிவடையலாயிற்று. இவற்றைத்தொடர்ந்து இனிமேல் ஏதேதுநடைபெறுமோ தெரியவில்லை. சும்மாகிடந்தசங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டிஎன்பது பழமொழியாகும். மொழிப்பிரச்சினை ஒன்[illegible]வரப்போய், அதிலிருந்து தமிழ்ப்பிரச்சினை எழப்போய் இன்று வகுப்புத்துவேஷமும், அமைதியின்மையும் நாட்டில் தலைதூக்கியுள்ளன. நாட்டில்அமைதி எங்கும்நிலவாதவரையிலே மக்கள்ஐக்கியமுன்னணி அரசாங்கம்செய்கின்ற அபிவிர்த்தித்திட்டங்கள் பயனளிக்குமோஎன்பதும், வாழ்க்கைத்தரம் உயருமோஎன்பதும் சந்தேகமே!

---

## "சமாதான குருமார்"

ஹங்கேரியிலே முறைகேடாகக் கம்யூனிஸ்தஆட்சியுடன் ஒத்துழைத்துப் பிரிந்துபோயிருந்த "சமாதானகுருமார்" தங்கள் மேற்றிராணிமாரிடம் சரணடைந்து, பரிசுத்தஸ்தானத்துக்கு விசுவாசப்பிரமாணஞ் செய்திருக்கின்றனர். "கத்தோலிக்ககுருமாரின் தேசியசமாதானகழகம்" என்ற இவர்களின் பிரிவினைஸ்தாபனமும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனிடமாகத் தற்போது கலொக்சாநகரின் குரோஸ் அதிமேற்றிராணியாரது தலைமையிலே "சமாதானதொண்டு" எனும் நாமத்துடன் புதியசங்கம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது.




சதாசகாயமாதா கோணம்

## தேவமாதாவுக்கு அதிஉகப்பான செபம்

தேவதாயாரின் பிரமாணிக்கமுள்ள தொண்டர்கள்—அவவுடைய அன்புமிக்கமக்கள் அனுசரித்துவரும் பத்திமுயற்சிகளில் மகாமுக்கியமானதும், நெடுங்காலமாகத் திருச்சபையில் வழங்கிவருவதுமான பத்திமுயற்சி திருச்செபமாலைப் பத்திமுயற்சியாகும்.

செபமாலைப்பத்தியானது தமக்கு மகாஆனந்தம் தருவதென்பதைத் தேவதாயார்தாமே பலசமயங்களில் எவ்விதஐயத்துக்கும் இடமவையாது வெளியிட்டிருக்கிறு. செபமாலைப்பத்திமுயற்சியானது தமக்கு எவ்வளவு மகிழ்ச்சி தருவதென்பதைத் தேவமாதா முதன்முதல் அறிவித்தது அர்ச். சாமிநாதருக்கேயாகும். அர்ச். சாமிநாதர்காலத்தில் "அல்பிஜென்செஸ்" என்று அறியப்பட்டுவந்த பதிதர் திருச்சபைக்குச்செய்துவந்த கெடுதிகளும், அநியாயங்களும், நிஷ்டூரங்களும இவ்வளவு அவ்வளவுஎன்று சொல்லுந்தரமல்ல. குருமாரைச் சித்திரவதைசெய்து கொலைபுரிந்தார்கள். தேவாலயங்களைத் தீக்கிரையாக்கினார்கள். பூசைப்பலிபீடங்களைத் தகர்த்தெறிந்தார்கள். நற்கருணைப்பேழைகளை உடைத்தெறிந்தார்கள். இவர்கள் திவ்வியசற்பிரசாதத்துக்கும் அருவருப்புக்குரிய அனுசாரம் செய்துவந்தார்கள். இவர்களுடைய அட்டாதுட்டித்தனத்தைக்கண்ட திருச்சபை அதிகாரிகள் இந்தப்பதிதருடைய துர்ப்போதகங்களைஎல்லாம் அழித்துவிடும்படியாக அர்ச். சாமிநாதரை இவர்களுக்குப்பிரசங்கம்செய்யும்படி அனுப்பிவைத்தார்கள். அவர்போய் எவ்வளவாகத்தான் செபமும்செய்து, தபமும் புரிந்து, பிரசங்கமும்செய்தாலும்அந்தப் பதிதர் ஒருசிறிதென்றாலும் மனமாற்றம்உடையவர்களாகக் காணப்படவில்லை.

அர்ச். சாமிநாதர் அப்பதிதரின்நிலைமையில் மனம்நொந்து, தேவதாயிடத்தில் தமதுமனவியாகுலத்தை எடுத்துச்சொன்னார். "பாவிகளின் நிமித்தம் தேவதாய்என்ற மகிமைப்பட்டத்துக்கு உயர்த்தப்பட்ட கன்னிகையே, நீர் தேவனின் தாயாகவும், மனுக்குலத்தவர்களின் தாயாகவும் இருப்பதற்குக் காரணர்களான இந்தப்பாவிகளைக் கைவிடாதேயும்; இவர்களுக்காகவும் உமதுதிருக்குமாரன் இரத்தஞ்சிந்தி நிஷ்டூரமானபாடுகளைப் பட்டாரேஎன்பதை நினைவுகூரும்; இவர்களுக்காகவும் நீர்வியாகுலவாளினால் ஊடுருவப்பட்டீர்என்பதை மறந்துவிடாதேயும்; இவர்கள் எல்லோரும் உமது கண்ணீரின்மக்கள் என்பதைச் சிந்தியும்; இவ்வளவுகண்ணீருக்கு இலக்காகஇருந்த உமது ஊதாரிப்பிள்ளைகள் நித்திய கேட்டுக்குஉள்ளாக [illegible]டப் போகிறீரோ? இவர்கள் தங்கள்உண்மையான பிதாவின்வீடுவந்துசேர வழி திறந்துவிடும்" என்று மகாநம்பிக்கையுடனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது செயற்கைச் சந்திரன்

ஓர் செயற்கைச்சந்திரனை ருஷியா சென்ற 4-ந் திகதி வெள்ளிக்கிழமை வாயுமண்டலத்தில் வெற்றிகரமாக மிதக்கவிட்டு உலகப்பிரசித்தி பெற்றிருக்கிறது. தற்போது இந்தச்செயற்கைக்கிரகம் பூமியிலிருந்து 500மைல் உயரத்திலே செக்கன் ஒன்றுக்கு நாலரைமைல்வேகத்தில் பூமியைச்சுற்றிக் கிரகமார்க்கமாகப் போய்க்கொண்டிருக்கிறது.

சந்திரன், செவ்வாய், சுக்கிரனாகிய கிரகமண்டலங்களுக்கு வாயுமண்டலக் கப்பல்களை அனுப்ப முயன்றுவரும் ருஷியாவின் திட்டத்தில் இது முதலாவதுகட்டமாகும். இதன் குறுக்களவு 23 அங்குலம், நிறை 163 றாத்தல். ருஷியா சிருட்டித்த இந்தப்புதிய சந்திரன் மணித்தியாலம் 18,000 மைல் வேகத்திலே உலகத்தைச் சுற்றிவருகின்றது. 95 நிமிஷங்களுக்கு ஒருமுறைவீதம் இது பூமியைச்சுற்றிவருகின்றது. தொடர்ந்து சுற்றிக்கொண்டிருக்கிறது.

இதில் சக்திவாய்ந்த றேடியோ ஒலிபரப்புக்கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கருவிகள் சதாசமிக்ஞைச் சப்தங்கள்மூலம்—அதாவது தந்தியடிப்பதுபோன்ற சப்தங்கள்மூலம் செய்தியனுப்பிக்கொண்டேயிருக்கின்றன. ரொக்கெற்றெனப்படும் ஓர் ஆகாயபாணமூலமே இந்தக்கிரகம் வாயுமண்டலத்தில் மிதக்கவிடப்பட்டது. இது நிரட்சரேகைக்குக்கீழே 66 பாகையுள்ளகோணத்தில் உலகைச் சுற்றுகின்றது.

இந்தக்குட்டிச் செயற்கைஉலகம் பூமியைச்சுற்றிவருவதைச் சாதாரண தூரதிருஷ்டிக் கண்ணாடிகள்கொண்டு சூரியஒளியில் சுலபமாகப் பார்க்கலாமாம். இது கடைசியாக வாயுமண்டலத்தின் மிகவுங்கனமான அமுக்கத்தில சிக்குண்டு எரிந்துவிடக்கூடுமென்றும ருஷியவிஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். சர்வதேச பூகர்ப்பஆராய்ச்சிவருடம் முடிவாகுமுன் இதிலும் பெரிய செயற்கைக்கிரகங்களை ருஷியா மிதக்கவிடுமென்று செய்திபரந்துள்ளது.

இக்கிரகத்தில் அமைக்கப்பட்டுள்ள றேடியோகருவிகள் ஒலிபரப்பிய அடையாளசப்தங்கள் அன்றுதினம் லண்டன் நகரிலுள்ள றுய்ட்டர்ஸ்தாபன வானொலி நிலையத்திலும், பின்னர் நியூயோக் நகரிலுள்ள வானொலிநிலையத்திலும் கேட்டன. அமெரிக்க ஒஹியோநாட்டின வானசோதிமண்டல அவதான நிலைய அதிபர் ருஷிய செயற்கைச்சந்திரனை அன்றுகாலை பார்த்ததாகவும், வேர்ஜினியாவிலே பன்னிருவயதுடைய ஓர்சிறுவன் தனது தூரதிருஷ்டிக் கண்ணாடியால் அதைப்பார்த்துவிட்டு, "அது ஒருபிரகாசமான செந்தாரகை" யென்றுகூறியதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். 'இந்தக் கிரகத்திலிருந்து ஒலிபரப்பப்படுகின்ற சமிக்ஞைச்சப்தங்கள் தெளிவாகவும், நன்றாகவும் கேட்கின்றனவென்று உலகின்பெரும்பாலான வானொலிநிலையங்கள் அறிவித்துள்ளன. "இனிச் சந்திரனைச்சுற்றிப் பறப்பது அடுத்தகட்டமாய் இருக்கும்; அதற்குப்பின் ஒருவேளை சந்திரனில் தானும் இறங்கக்கூடு"மென அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

---

தாழ்மையுடனும் மன்றாடினார் அர்ச். சாமிநாதர்.

இப்படிமன்றாடிய சாமிநாதருக்குத் தேவதாயார் காட்சிகொடுத்து: "மகனே! இந்தப்பதிதர் மனந்திரும்பும்படி செபமாலைப்பக்தியைப்பிரசங்கித்துவா; சனங்களை ஒன்றுசேர்த்து எல்லாரும் ஒருமிக்கச செபமாலை ஓதும்படிசெய்; எனக்கு மகாமகிழ்ச்சியை உண்டுபண்ணும் இந்தப்பத்திமுயற்சியால் இந்தப்பதிதர் மனந்திரும்புவார்கள்; "அல்பிஜென்சரின்பதிதம் இருந்தவிடமும்தெரியாது மறைந்துவிடும்" என்று தேவதாயார் சாமிநாதருக்குப் பணித்தார். சாமிநாதரும் தேவதாயாரின்கட்டளையைச் சிரமேற்கொண்டு சகலருக்கும் செபமாலைப்பத்தியைப் பிரசங்கித்துக்கொண்டு வந்தார். அந்தப்பதிதர்கூடியிருந்தசபைகளில் அவர்கள்முன்னே சாமிநாதரும, அவரைப் பின்பற்றியவர்களும் செபமாலையைப் பயபத்தியுடன் சொல்லிவந்தார்கள். அதனால்விளைந்த அற்புதமான மனந்திரும்புதல்களுக்குக் கணக்கேயில்லை. ஆயிரம்ஆயிரமாகப் பதிதர்மனந்திரும்பினார்கள். பிரியதத்தமந்திரத்தைக் கிறீஸ்துவர்கள் சொல்லும்வேளைகளில் மூர்க்கராகப் பதிதத்தில் நிலைகொண்ட சிலரிடமிருந்து பிசாசுகள் நெருப்புப் பொறிகள்போல அவர்களைவிட்டு நீங்கிப்போனதைச் சனங்கள்கண்டு தேவமாதாவைத் தோத்திரித்துவாழ்த்தினார்கள். சிறிதுகாலத்தில் அந்தத்துஷ்ட பதிதமதம் பரிதிமுன் பனிபோலச் செபமாலைப்பத்தியினால் அற்றுஅழிந்துபோனது. இந்தப்பத்தி தேவமாதாவுக்கு மகாபிரீதி உண்டுபண்ணுவது என்பதைக் காட்டும்படியாகத்தான் தேவதாய் இப்படிச்செய்தா.

ஆகவே, நாமும் இந்தநல்ல செபமாலைபத்திமுயற்சியை நாள்தோறும் அனுசரித்துவா—விசேஷமாக நாள்தோறும் குடும்பசெபமாலை சொல்லிவரத் தேவதாயாருக்கு வாக்குப்பண்ணுவோமாக.

---

## 20-10-57 ஞாயிறு
## விசுவாசப்பரப்புதல் ஞாயிறு

---

### நீரிழிவுக்குப் புதியமருந்து

நீரிழிவினால் வருந்துகிறவர்கள் தினமும் "இன்சுலின்" எனும் மருந்தை ஊசியினால் உட்செலுத்திக்கொள்வது பலரும்அறிந்ததே. ஆனால், வைத்திய நிபுணர்கள் இந்தஊசிமருந்துச் சிகிச்சையின்கஷ்டம் நீங்குமாறு வாய்மூலமாக உட்கொள்ளக்கூடிய மருந்தொன்றைக் கண்டுபிடிக்க நெடுங்காலமாக முயன்றுவருகிறார்கள். என்றாலும், இதுவரை இந்தமுயற்சி பலன்தரவில்லை. இப்போது வில்லியம் ஸ்ரொக்ஸ் என்ற விஞ்ஞானநிபுணர் "சல்பா" மருந்தொன்றைக் கண்டுபிடித்துள்ளார். இந்தமருந்துகொண்டு நடத்திய பரிசோதனையிலே அது இரத்தத்தில் அதிகமாயிருக்கும் சீனியின் அளவைக் குறைப்பதாகக்கண்டார். ஆரம்பத்திலே எலிகளின்உடலில் பரிசோதனை செய்துபார்த்தார். நல்லபலன் காணப்பட்டது. பின்னர் நீரிழிவுநோய்கண்ட நூறுபேருக்கு அம்மருந்தைக்கொடுத்துப்பார்த்தார். வயதுவந்தவர்களுக்கு இம்மருந்து நீரிழிவைக் குணமாக்கத்தக்கதென்று அனுபவத்தில் தெரிந்தது. ஆனால், இளம்வயதிலே நீரிழிவு கண்டு வருந்துகிறவர்களுக்கு இம்மருந்து விசேஷபலன் அளிக்கவில்லை. இந்தவகையிலே அவர் இன்னுமே ஆராய்ச்சி செய்துவருகிறார். மாத்திரையொன்றை அன்றாடன்று உட்கொண்டு நீரிழிவைக் குணமாக்கிக்கொள்ளும் காலம் விரைவில் வரப்போவதாய்ச் சொல்லப்படுகிறது.

* * *

மலாயாப்பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் பிரித்தானிய அரசாங்கத்துடன்செய்துள்ள இராணுவபாதுகாப்பு ஒப்பந்தத்தை மலாயாச்சட்டசபை சென்றவாரம் அங்கீகரித்திருக்கிறது. பிரித்தானிய அரசாங்கம் தனது ஏகாதிபத்தியபடைகளை மலாயாவில் நிறுத்திவைக்கவும், அங்கு தளங்களை அமைக்கவும் யுத்தம்மூண்டுகொள்ளுமிடத்து அவைகளைஉபயோகிக்கவும் இந்தஒப்பந்தம் அதற்கு வசதியளிப்பதாகும்.

## பாடசாலைகளுக்கு விடுதலை

ஆசிரியர்களின் ஞானவொடுக்கத்தை முன்னிட்டு யாழ்ப்பாணமேற்றிராசனத்திலுள்ள எல்லாக்கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைகளுக்கும் இம்மாதம் 18-ந்திகதி வெள்ளிக்கிழமையும், 21-ந்திகதி திங்கட்கிழமையும் விடுதலைநாட்களாகும் என்பதைத் தலைமைஆசிரியர் எல்லோருந் குறித்துக்கொள்ளும்படி இத்தாற் கேட்டுக்கொள்ளுகிறேன்.

PHILIP PONNIAH
Gen. Manager of R. C. Schools

Jaffna, 9-10-57.

## விளம்பர. விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

# மட்டக்களப்பு
# தாண்டவன்வெளித் தபால்

**பங்குக்குரவரின் பிறந்ததின விழா:—**இம்மாதம் 2-ந்திகதி அதிகாலை. அன்றையபரிமளிப்பான நிகழ்ச்சிகளின்ஆரம்பமாகத் தாண்டவன்வெளி, பரிசுத்தவியாகுலமாதா ஆலய மணிகள் ஆர்ப்பரிக்க, பாடசாலைப் பிள்ளைகள், ஆசிரியர்கள், பத்திச்சபைகளைச் சேர்ந்தவர்கள், பங்குக்கிறீஸ்தவர்கள், அன்பர்கள் அனைவரும் பெருந்திரளாக ஆலயத்தில் வந்துகூடினர். "தந்தையினசுபதினம் மைந்தர்மகிழ்தினம்" என்றபடி, அன்று பார்த்தஇடமெல்லாம் பரிமளிப்பாகவே காட்சியளித்தது. தமது 43-வது பிறந்ததினவிழாவைப் பலிபீடத்திலிருந்து ஆரம்பித்தார் எமதுபங்குக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமியவர்கள். திவ்வியபூசைகண்டும், திருவிருந்தருந்தியும், பாடியும், செபித்தும இவ்வாறுகப் பல்லாண்டு அவர்தம்பங்கில் வாழவேண்டி இறைவனை இறைஞ்சிநின்றனர் தாண்டவன்வெளிப் பங்கிலுள்ளோர்.

அன்றுகாலை 8-30மணிக்கு வாத்தியங்கள்இசைக்க அலங்கரிக்கப்பெற்ற குருமனையிலிருந்து சுவாமியவர்களைத் தாண்டவன்வெளி ஆண், பெண்பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்மாணவிகள் குதூகலத்துடன் ஊர்வலமாக ஆண்பாடசாலைக் கொடிஸ்தம்பத்தின் பக்கமாக அழைத்துச்சென்றனர். அங்கு அவருக்கு மலர்மாலை அணிவிக்கப்பெற்று, இருபாடசாலைகளினதும் சார்பில் "ஞானப்பூச்செண்டும்" வழங்கப்பட்டது. பின்னர் பாடசாலைக்கீதம் இசைக்க, பாடசாலைக்கொடி விழாநாயகரால் ஏற்றிவைக்கப்பட்டது.

அதன்மேல் முன்காட்டிய வரிசைகளோடு அவரை ஆண்பாடசாலைக்கு அழைத்துச்சென்று ஆசனத்தமரச் செய்ததும் ஆண், பெண்பாடசாலைகளின் ஆசிரியர், ஆசிரியைகள் வலம் இடமாக அமர்ந்தனர். விழாவின்தலைவியும், பெண்கள்கழகத் தலைமைஆசிரியையுமான திருமதி ஈ. ஏ. நாதன் அவர்களால் சுவாமிகளுக்குப் பிறந்ததின வாழ்த்தும், நிகழ்ச்சிகட்கு ஆரம்பஉரையும் கூறப்பட்டன. அதன்மேல் ஆண், பெண்பாடசாலைகளின் மாணவர்மாணவிகளால் தமிழிலும், ஆங்கிலத்திலும் வாழ்த்துப்பாக்கள் படிக்கப்பட்டபின் அவரின்சீவியவரலாறு, அன்னாரின் தகைமைகள், திரிகோணமலைமேற்றிராசனத்தின்பலபங்குகளிலும் அவர்ஆற்றியுள்ள அரும்பெருந்தொண்டுகள், தாண்டவன்வெளிப்பங்கில் மூன்றாண்டுகளாகச் செய்தசேவைகள், பிரதானமாகப் பாத்திமாகிரி, ஆயித்தியமலை சதாசகாயநாயகிஆலயம் ஆனைத்தையும் விபரிக்கும் அழகிய சித்திரவேலைப்பாடுகள் அமைந்த இசைத்தமிழ் வாழ்த்துப்பத்திரம் ஆணபாடசாலைஆசிரியர் ரி. அழகையா அருளப்புஅவர்களால் படித்துக் கொடுக்கப்பட்டது. சுவாமிகளின் அயராதஉழைப்புக்கு உறுதுணையாக அயர்ச்சியைஅகற்றும் மின்சாரவிசிறி ஒன்று ஆசிரியர்கள்சார்பில் ஆண்பாடசாலைத் தலைமைஆசிரியர் கே. எல். இராசேந்திரம்அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. பின்னர்ஆசிரியை தெரேஸ் பிரான்சீஸ்அவர்களால் சுவாமிகளின்சேவைநலம்பாராட்டிச் சொற்பொழிவாற்றப்பட்டதும் கதம்ப நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

ஆண், பெண்பாடசாலைகளின் மாணவர்மாணவிகள் முறைமுறையாக நடனம், கும்மி, கோலாட்டம், நடிப்புகள், அபிநயப்பண்முதலிய ஆடல்பாடல்களால் சபையோரை மகிழ்வித்தனர். முடிவில்சுவாமிகள்எழுந்து தமதுபிறந்ததினவிழாவை மிகப்பரிமளிப்பாக இருபாடசாலைகளுஞ்சேர்ந்து சிறப்பாக நடாத்தியமைக்கும், அன்பளிப்புக்குமாக நன்றிதெரிவித்து இருபாடசாலைகளிலும் ஞானக்கல்வி மிக்ககவனமாக ஊட்டப்படவேண்டுமென வற்புறுத்தித் தமதுஅபிஷேககர ஆசீரளித்தார்.

அதன்மேல் ஆசிரியர்கள், மாணவர்கட்குக் குளிர்பானமும், மிட்டாய்களும், விடுமுறையும்அளிக்கப்பட்டன. தலைமைஆசிரியர் கே. எல். இராசேந்திரம்அவர்கள் எல்லோருக்கும் நன்றியுரைகூறினர். பாப்பரசர்கீதம், தேசியகீதத்துடன் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. பிந்தச் சுவாமியவர்களால் ஆசிரியசகோதரர், சகோதரிகட்கு மதியவிருந்து அளிக்கப்பட்டது.

அன்றுபகல்முழுவதும் பங்குக்கிறீஸ்தவர்கள், பத்திச்சபைஅங்கத்தவர்கள், அன்பர்கள் சுவாமிகளைச்சந்தித்துப் பிறந்ததினவாழ்த்துக்கூறி அன்பளிப்புகளும்வழங்கினர். எம்பங்கிலுள்ள வறியோரின் சிறியகன்னியர்களும், அவர்களது தலைமைத்தாயாரும், ஆண் பெண்வயோதிபர்களும் அவரை அழைத்து வாழ்த்துக்கூறி, அன்பளிப்பாக அழகியபூசைஉடுப்புவழங்கினமை ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

பிற்பகல் 5மணிக்கு அர்ச். சவேரியார் சேவாசங்கத்தினரால் சுவாமிகளின் இல்லத்தில் சம்பிரமமானதேநீர் விருந்து உபசாரணை நடத்தப்பட்டது. நம்பங்குக்குரவர் அவர்களை இன்னும் பல்லாண்டு எம்பங்கில்வைத்துக் காப்பாற்ற அமலன் திருவருள்புரிவாராக!

—நிருபர்.

---

**விற்பனைக்கு**

## மோக்ஷபாதை
(பைபிள் பேப்பர்)

கலிக்கோக்கட்டு — ரூபா 4-50
தோறகட்டு — ,, 7-00

## முத்தித்திறவுகோல்

கலிக்கோக்கட்டு — ரூபா 2-50
தோற்கட்டு — ,, 3-50

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கண்ட லிஸியே

—: "சர்வவியாபி" ஆசிரியர் :—

சிறியபுஷ்பமாகிய அர்ச். தெரேசம்மாள் மரணமடைந்த 60-ம்ஆண்டு நிறைவுஞாபகதினத்தையொட்டி அப்புனிதசீலிவதிந்த லிஸியேநகரின் சீர் சிறப்புக்களைப் பற்றியநினைவும் இயல்பாகவேஎழுகின்றது. நமதுஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தின் போது இந்த நகரில் நாம்முகக்கண்ணால் கண்டுகளித்தவற்றை இன்று அகக்கண்முன் கொணர்ந்து எழுத்துருவாக்கி வாசகர்கட்கு வழங்குகின்றோம்.

லிஸியேநகர் பரீஸ்மாநகருக்குச் சற்றுவடமேற்கே ஏறத்தாழ100மைல் தூரத்தில் இருக்கின்றது. விரைந்து செல்லும் புகைவண்டியில் ஏறினால் அங்குசெல்ல மூன்றுமணிநேரந்தான் பிடிக்கின்றது.

**மகாதேவாலயம்**

நகரின் எல்லையை நெருங்குமுன்னரே மலைபோன்றஉயர்ந்தவிடத்தில் கம்பீரமாக அமைந்திருக்கும் வெள்ளை வெளேரென்ற புதியமகாதேவாலயம் கண்ணைக்கவர்கின்றது. புகைவண்டி நிலையத்திலிருந்து அம்மகாதேவாலயத்திற்கு ஒருபெர்லாங் தூரந்தான் இருக்கும். ஆனால், வெகுஉயரத்துக்குஏறிச் செல்லுதல் வேண்டும். நீலவானிலே வெள்ளைக்கோபுரத்தின்மீது சுமார் 100யார் உயரத்தில் வெற்றிவிருதாகிய சிலுவைஅதிலே அழகுற அமைந்துள்ளது. தேவாலயத்தின் உட்புறநீளம் சுமார் 100 யார். பக்கச்சாலைகள் இரண்டையுஞ்சேர்த்தால் அகலம் 52 யார். நடுச்சாலையின் அகலம்மட்டும் 32 யார். ஆலயத்தின்முகப்பில் "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்"என்ற யேசுவின்பொன்மொழி கொட்டைஎழுத்துகளில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கடியில் யேசு சிறுபிள்ளை ஒன்றைஅழைத்து அப்போஸ்தலர்களின் நடுவே நிறுத்தி அப்பிள்ளையைப்போன்றவர்கள்தான் வான்வீடுபுக முடியுமென்று அறிவுறுத்தும் காட்சி ஓவியமாகத் தீட்டப்படுதற்கு அடிப்படையான கோடுகள் வரையப்பட்டிருக்கின்றன. ஓவியம் இன்னும் முடிவுபெறவில்லை. அதன்கீழ் விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம், நீதி, விவேகம், திடம், மிதம ஆகிய ஏழுபுண்ணியங்களும சிற்பங்களாக அமைக்கப்பட்டிருத்தல் ஒருதனிச்சிறப்பு. ஆலயத்துள் நடுப்பீடம்தவிர்த்துப் பக்கத்துக்குஎட்டாக இருமருங்கிலும் மொத்தம் 16 சிற்றாலயங்களும், அவற்றில் பீடங்களும் கட்டப்பட்டுள்ளன. பீடங்கள்ஒவ்வொன்றும் ஒவ்வோர் குறிப்பிட்டநாட்டின் நன்கொடைகொண்டு கட்டப்பட்டது. எனவே, ஒவ்வொன்றிலும் சம்பந்தப்பட்ட நாட்டின்பெயர் குறிக்கப்பட்டுள்ளது. சுவிசேஷப்பக்கத்தில் யு. எஸ்.ஏ, கொலம்பியா, இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து, அயர்லாந்து, கனடா, பெல்ஜியம், ஹலந்து, போலாந்துஎன்ற நாமங்களும், நிருபப்பக்கத்தில் போர்த்துக்கால், ஆர்ஜன்ரீனா, பிறேஸில், பிரான்ஸ், வேதபோதகநாடுகள், இத்தாலி, ஸ்பெயின், மெக்ஸிக்கோ என்றநாமங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. சுவர்களிலும், மேற்கூரையிலும் காட்சியளிக்கும் 'மோசேய்க்' ஓவியங்களும், கண்ணாடிச்சன்னல்களின் சித்திரங்களும், விருதுவாக்கியங்களும் அர்ச். தெரேசம்மாளின்வாழ்க்கைக்கட்டங்களையும், வாக்குத்தத்தங்களையும், ஞானவுரைகளையும் நினைவூட்டுகின்றன. நாமெல்லோரும் சர்வேசுரனுடையபிள்ளைகள் என்ற அடிப்படையான உண்மையை ஆலயத்தின் உட்புறச்சோடினை பொதுப்பட எடுத்துக்காட்டுகின்றது.

தேவாலயத்திற்குக்கீழே சுரங்கஆலயம் ஒன்றுள்ளது. அங்கே மூன்று பெரியபீடங்கள் உள்ளன. இந்தச் சுரங்கஆலயத்தின் உட்புறம்முழுமையும் (சுவர், கூரையாவும்) மோசேய்க் சித்திரங்களால் நிரப்பப்பட்டுள்ளது.

மேலே கிழக்குமேற்காக அமைந்துள்ள மகாதேவாலயத்தின் முகப்புக்கு வெளியே இருபுறங்களிலும் வடக்குத் தெற்காக இரக்கைகள்போன்ற இரு நீண்ட கட்டடங்கள் இருக்கின்றன. ஒன்றில் நாள்முழுதும் அர்ச்சியசிட்டவளின் வாழ்க்கைவரலாறு திரைப்படவாயிலாகத் திருயாத்திரிகட்கு இலவசமாகக் காட்டப்படுகின்றது. மற்றொன்றில் செபமாலை, படம், சுரூபங்கள் போன்ற விற்பனைக்கான பொருட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றோடு அழகான பொருட்காட்சிச்சாலையொன்றும் இருக்கின்றது. இதிலே ஒரு தமிழ்ப்புத்தகமும் காணக்கிடக்கின்றது. "அஞ்ஞானநாடுகளிலே சுதேசகுருமாரைப்பிறப்பிப்பதற்கு அப்போஸ்தலரான அர்ச். இராயப்பர்பெயரால் ஏற்படுத்தப்பட்ட தர்மசபை—கும்பகோணமுதல் இந்தியமேற்றிராணியாரின் அபிஷேகஞாபகமாகப் பிரசுரிக்கப்பட்டது. 29-6-1931" என்று அதன் மேல்அட்டையில் அச்சிடப்பட்டிருக்கின்றது. அதேபொருட்காட்சிச்சாலையில் அர்ச். குழந்தை தெரேசாவின் பக்திபாவியிருக்கும் நாடுகள்சம்பந்தமான படங்களும் இருக்கின்றன. அவற்றுள் "இந்தியா" என்ற தலைப்பின்கீழ் "1. ஏழைமக்கள் வண. வியா (Viard) சுவாமிகட்குப் பனைஓலையில் ஒருவிண்ணப்பம்எழுதிக் கொடுக்கின்றனர்; 2. தூத்துக்குடி ரோச்ஆண்டகையும்,விசுவாசிகளும அர்ச்சியசிஷ்ட தெரேசாவின் சுரூபத்துக்குமுன் வேண்டிக்கொள்கின்றனர்; 3. அர்ச். தெரேசாவின்பெயர்கொண்ட ஓர்ஊர்" என்றவிபரங்களும், அவற்றிற்கேற்ற ஓவியங்களும்தீட்டப்பட்டிருக்கின்றன.

தேவாலயத்தின் பக்கவாட்டத்திலும், பின்புறத்திலுமுள்ள விசால்மான தோட்டத்தில் சிலுவைப்பாதையின் 14 ஸ்தலங்களும் ஆள்உயரச் சிற்பங்கள்அடங்கிய சிறுசிறுகட்டிடங்களாக அமைந்துள்ளன. முதல் ஸ்தலமும், கடைசிஸ்தலமும் நடுவிலிருக்க, மற்றப் பன்னிரண்டும மும்மூன்றாகச்சேர்ந்து இருபுறங்களிலும் எழுதப்பட்டுள்ளன.

**கார்மேல் மடம்**

தேவாலயத்தையும், அதன் விசாலமான திடலையும்விட்டு ஊருக்குள் இறங்கினால் கார்மேல்மடம் குறுக்கிடும். அம்மடத்துக்கோயிலில் திருயாத்திரிகட்குப் பாவசங்கீர்த்தனங்கொடுக்கக் குருமார் சதா காத்துக்கொண்டிருக்கின்றனர். கோவில்சாலையில் நிருபப்பக்கச் சுவரில் திறக்கப்பட்டிருக்கும் சிறுஅறையில் அர்ச். தெரேசாவின் அருளிக்கங்களை உள்ளடக்கிய அவளுடைய ஆள்வடிவச்சுரூபம் மரணப்படுக்கையில் அமைதியாக அயர்ந்திருக்கும் நிலையில் வெள்ளிச்சட்டங்களை உடைய வேலைப்பாடுநிறைந்த கண்ணாடிப்பேழைக்குள் (La Chasse de Ste. Therese) வைக்கப்பட்டிருக்கின்றது. அவளுடைய வலதுகாத்தினின்று பறந்தோடுவதுபோல் 11-ம் பத்திநாதபாப்பானவர்அனுப்பிவைத்த பொன்றோசாமலர் காட்சியளிக்கின்றது. அவள் வீட்டில் வியாதியாயிருந்தபோது தாவிவந்து புன்முறுவல்புரிந்த மரியன்னையின் அற்புத சுரூபமும் (Le Vierge de Sourire) இப்பொழுது இவ்வறையில்தான் இருக்கின்றது.

கார்மேல்மடத்துஎல்லைக்குள்ளேயே கோவிலையடுத்துள்ள ஒருதனிஅறைக்கு நினைவுச்சின்னங்களின் அறை (Salle de Souvenirs) என்றுபெயர். அங்கே அர்ச். தெரேசா ஞானஸ்நானம் பெற்றபோது அணிந்திருந்த சிறுவெண்ணுடை, நவகன்னியாக உடையணிந்தபோது போட்டுக்கொண்ட 'வெயில்', வெட்டப்பட்ட சுருள்சுருளான நீண்ட அழகிய பொன்னிறக்கூந்தல், அணிந்திருந்த வெள்ளைப்பாதரட்சைகள், வார்த்தைப்பாடு கொடுத்தபின் உடுத்துக்கொண்ட வுல்லன்ஆடை, செபமாலை, போர்வை, மூடிகள், எழுதஉபயோகித்த மேசை, பலகை, எழுதுகோல்முதலியன பார்ப்போரைப் பிரமித்துநிற்கச் செய்கின்றன.

**மேற்றிராசன ஆலயம்**

கார்மேல்மடத்தைவிட்டு நகருக்குள் இன்னுஞ் சற்றுத்தூரம் சென்றால் அர்ச். இராயப்பர் பெயர்கொண்ட மேற்றிராசனஆலயம் இருக்கின்றது. அங்கு அர்ச். தெரேசா ஞாயிற்றுக்கிழமைகளிலும், பெருந்திருநாட்களிலும் பிரசங்கம்கேட்க உட்கார்ந்திருந்த இடம், முதற்பாவசங்கீர்த்தனம்செய்த பாவசங்கீர்த்தனத்தொட்டி, அடிக்கடி திவ்வியநன்மை வாங்கிய தேவதாயின் சிற்றாலயம் முதலியவை சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவை.

**சொந்த வீடு**

நகருக்குவெளியே வடதிசையில் அவளுடைய சொந்தவீடு இருக்கின்றது (Les Buissonnets). ஓடுக்குமெத்தைவீடு அது. கீழே கார்மேலமடத்திற்குச் செல்லுமுன் அவள் கடைசிமுறையாக இராப்போசனம் உண்ட அசனசாலையும், மெத்தைவீட்டில் தந்தைமார்த்தீனின் அறையும், சிறுமிதெரேசா வியாதியாய்ப் படுத்திருந்த கூடமும், அவளுடையசகோதரிகள் படுத்திருந்தஅறையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. வியாதியாய்ப் படுத்திருந்த இடத்தில் இப்போது ஒருபீடம் கட்டப்பட்டுள்ளது. அருகிலிருந்த அன்னையின் சுரூபந்தான் வியாதியால்வருந்திய தெரேசாவுக்கு ஆறுதல்தரத் தாவிவந்து புன்முறுவல புரிந்தது இந்த அற்புதசுரூபம் தற்போது மேலேகுறித்தபடி கார்மேல் மடத்துக் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. அதற்குப்பதிலாக அதைப் போன்ற வேறொருசுரூபம் இங்கே இருக்கின்றது. சகோதரிகள் வசித்த அறையில்தான் இப்போது தெரேசாவின்கட்டிலைப் போட்டுவைத்திருக்கிறார்கள். அதில் அவள்சிறுவயதில் அணிந்திருந்த ஆபரணங்களையும், உடைகளையும், விளையாட உதவிக்கொண்ட பொம்மைகளையும், உண்ண உபயோகித்ததட்டுகளையும் அப்படியே காணலாம். வீட்டின் பின்புறத்திலுள்ள தோட்டத்தின் மதில்சுவருக்கருகே அர்ச்சியசிட்டவள் சிறுமியாயிருக்கையிலே தானேஅமைத்த சிறு பெத்லகேம் மாட்டுக்கொட்டகை இன்னும் காணக்கிடக்கின்றது. தோட்டத்தின்நடுவே கார்மேல்மடம் செல்லத் தந்தையிடம் கெஞ்சி அனுமதிபெறும பாவனையில் அமைந்துள்ள சலவைக்கற் சிற்பம் விழிகளுக்குப் பெரும் விருந்தளிக்கின்றது. பார்த்தவுடன் நம்மை ஏமாறச்செய்கின்றது. சிற்பமா அல்லது மெய்யான ஆட்களுருவமா என்று திகைக்கநேரிடுகின்றது. அவள் புதுநன்மைவாங்கிய ஆசீர்வாதப்பர் சபையைச்சார்ந்தமடம முழுதுபார்த்துப் புதுப்பிக்கமுடியாத அளவிற்கு உலகயுத்தத்தின்போது முற்றிலும்அழிந்துவிட்டது.

## அர்ச். சின்னத்தெரேசம்மாள் திருநாள்

சூராவத்தையம்பதியிலே நவமாக நிறுவப்பெற்றிருக்கும் ஆலயத்தில் பாலகயேசுவின் அர்ச். சின்னத்தெரேசம்மாள் திருநாள் அவ்வூர்க் கத்தோலிக்கமக்களால் சென்ற புரட்டாதித்திங்கள் 29-ம்நாள் ஞாயிறுவாரம் பத்தியருட்சிக்குரிய விதமாய்க் கொண்டாடப்பெற்றது. திருநாளுக்குமுந்திய நவதினங்களிலும் மாலைவேளை செபமாலை, பிரார்த்தனையின் பின் கட்டளைக்குரவர் வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியவர்களால் அர்ச். சின்னத்தெரேசாவின் சாங்கோபாங்க வாழ்வினைப்பற்றி அரிய பிரசங்கங்கள் செய்யப்பெற்று வேஸ்பர்பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. முந்தின எட்டுத்தினங்களிலும் வண. கட்டளைக்குரவரின் பிரசங்கங்களில் திளைத்திருந்த மக்கள்உள்ளங்களைச் சனிவாரம் இளவாலைக் கட்டளைக்குரவர் வண. ஹென்றி ஜெஸ்லான்ட் சுவாமியவர்கள்செய்த அரும்பெரும்பிரசங்கம் அதிகபரவசத்துள் ஆழ்த்தியது. அதன்மேல் சுவாமியவர்கள் அர்ச். சின்னத்தெரேசம்மாளைச் சூராவத்தையம்பதிக்கு ஓர்இராணியாக எழுந்தருளச்செய்து ஆசீர்வதித்தருளினார்.

திருநாளன்று ஞாயிறுவாரம் காலை 7-30 மணிக்குப் பாடற்பூசை நிறைவேறியது. திரளானமக்கள் திருவிருந்தருந்தினர். தேவாலயம் பன்னிற மணமலர்களாலும், பசுந்தளிர்களாலும் தேசோமயமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பூசையின்போது பாலர்களால் இனியகீதங்கள் இசைக்கப்பட்டன. பிறவூர்களிலுமிருந்து திரளாகவந்துகுவிந்த மக்களால் நிறைந்திருந்த தேவாலயத்தின்மாட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. பூசைமுடிவில் சிற்றுண்டிவகைகள் ஆசீர்வதித்து அனைவருக்கும் பரிமாறப்பட்டன.

அன்றுபிற்பகல் 5மணிக்குப் பெருந்திரளான பக்தர்கள் கூடியிருக்க வண. ஜெஸ்லான்ட் சுவாமியவர்கள் வேஸ்பர்பாடியதன்மேல் பக்தர் குழாம் புடைசூழச் செபவோசை, மணியோசை, சங்கீதவோசை, பான்ட்வாத்தியவோசை மத்தியிலே அர்ச். தெரேசம்மாள் அலங்கரிக்கப்பட்ட அழகியதொரு பூந்தேர்மீது பவனிவரலானாள். மாலைகளாலும், துவசதோரணங்களாலும் சிறப்பாகச் சிங்காரிக்கப்பெற்றிருந்த வீதிவழியே திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நிகழ்ந்து கோவிலையடைந்ததும் வண. கட்டளைக்குரவரால் திருச்சுரூபஆசீர்வாதம் அருளப்பெற்றுச் சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதே நிறைவேறியது.

அர்ச். சின்னத்தெரேசம்மாள் பரமபதமடைந்த 60-ம்வருட நிறைவு விழாவையொட்டி முதன்முதலாகச் சூராவத்தையில் கொண்டாடப்பட்ட இத்திருநாள் நிகழ்ச்சி அதன்சரித்திரத்திலே பொன்அட்சரங்களாற் பொறிக்கப்படவேண்டியதொன்றும்.

— நிருபர்

## 20-10-57 ஞாயிறு விசுவாசப்பரப்புதல் ஞாயிறு

● ரூஷியா சென்ற 4-ந்திகதி வெள்ளிக்கிழமை வானமண்டலத்தில் பறக்கவிட்ட செயற்கைச்சந்திரனைக் கண்டதாக இதுவரை உத்தியோகபூர்வமான செய்தியில்லை; ஆனால், அதிலிருந்து வானொலி அறிவிப்புகள் வந்துகொண்டிருக்கின்றன; செயற்கைச் சந்திரன் இதுவரை உலகத்தைச் சுமார் இருபதுமுறை சுற்றிவந்துவிட்டதென்று லண்டனிலிருந்து சென்ற 6-ந்திகதி செய்திகிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



## அருமைச் சகோதரங்களே !

அண்மையிற் சுதந்திரம்பெற்ற ஆசியநாடுகளில் அதிகம் இளையது மலாயா. அங்கு வசிக்கின்ற மக்கள் பலஇனத்தவராயினும், பலமதத்தவராயினும் சகோதரங்கள் போன்று சமாதானமாய்ச் சீவிக்கின்றனர். மலாயாவிற் சீவித்தமக்களை நாம் சந்தித்தால் அவர்களுடைய பரந்தநோக்கும், எவருடனும் இலகுவாய்ப் பழகும் சுபாவமும் அவர்களிடங் காணலாம்.

மலாயாவின் சுதந்திரப் பிரமாணம் மேல்வருமாறு தொடங்குகிறது. "கருணையும், இரக்கமுமுள்ள கடவுளின் நாமத்தினுலே உலகஅதிபதி கர்த்தராகிய கடவுளுக்குத் துதியும், அவருடைய தூதுவருக்குத் தேவ ஆசீர்வாதமும், சமாதானமும் உண்டாவதாக."

நாத்திகம் பரந்துவரும் இக்காலத்தில், கடவுளை மறப்பது கற்றோருக்கு அழகுஎன எண்ணப்படும் இக்காலத்தில், நிரீச்சுரம்பேசுவது "மோடி"யாயிருக்கும் இக்காலத்தில் மலாயா ஆத்திகத்தைத்தழுவிக் கடவுள் நாமத்தினுலே, கடவுளை முன்வைத்துச் சுதந்திரக்கொடியை ஏற்றியிருக்கிறது. இது வரவேற்கத்தக்க மகிழ்ச்சிக்குரிய செய்தியன்றோ.

எமது சகோதரர், மாமன்மார், மருமக்கள்அநேகர் மலாயாவிற் சீவிக்கிறார்கள். பொருளாதார நிறைவினுல் செல்வம்கொழிக்கும்நாட்டில் அவர்கள் செல்வந்தேடச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் மலாயாவில் பிரசா உரிமைபெற்றாலும், தமது பிறந்தமண்ணைத் தேடிவந்தாலும் கடவுள்பக்தராயிருப்பார்கள். அதற்கு அவர்களுடைய சுதந்திரப்பிரமாணம் இடங்கோலி வைத்திருக்கிறது.

மலாயாவிற்கு எமதுவாழ்த்து காலங்கடந்ததாயிருக்கலாம். ஆனுல், சுதந்திரமலாயா ஆசியநாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் துலங்குவது பற்றி நாம் மகிழ்ச்சிகொள்ளாமல் இருக்கமுடியாது. சுதந்திரமலாயாவுக்கு ஜே ! ஆத்திகமலாயாவுக்கு ஜே !! அதைநிர்மாணித்த தலைவர்கட்கு ஜே !!!

---

## பரிசுத்த செபமாலை இராக்கினியே வாழ்க !

— மேரி கொன்ஸ்ரன்ஸ் பிலிப் —

கத்தோலிக்க மக்களே ! பொல்லூன்றிப் பஞ்சுபோன்று வெண்நிறக்கூந்தலுடனும், வளைந்த முதுகுகளுடனும் காட்சியளிக்கும் வயோதிபரே ! நீலக்கடலிலே துள்ளிக்குதித்து விளையாடும் சுறுமீனைப்போன்று இப்பாரினிலே இளமைப்பருவத்தையெய்தி இன்பத்திலே காலம்போக்க மனக்கோட்டைகட்டிக்கொண்டிருக்கும் இளம்வாலிபரே ! வனிதைகளே ! பச்சிளங்குழவிகளே ! சற்றுச்சிந்தியுங்கள் ! எதைப்பற்றிச் சிந்திப்போமென்னும்கேள்வி உங்கள்மனதில் உதிக்கிறதா ? இதோ பதில் ;

1957-ம் ஆண்டு ஒன்பதுமாதங்களும் இன்பகரமாகக் கழிந்துவிட்டன. அனுபவித்த இன்பத்திலும் ஆயிரம்மடங்கு இன்பத்தையூட்டும் பத்தாம்மாதமாகப் பரிசுத்த செபமாலைஇராக்கினியின் ஐப்பசிமாதம் எங்கள் எல்லோரது வீடுகளிலுமுள்ள தினத்தாள்களிலும் (கலண்டர்) உதயமாகிவிட்டது. ஐப்பசிமாதம் பிறந்தால் என்னவிந்தைஎன்றுகேட்பீர்களா? ஐப்பசிமாதத்தின் அழியாவிந்தையையும், அம்மாதத்தில் நாம் என்ன செய்யவேண்டுமென்றும் அயராது எல்லாக்கோவில்களிலுமுள்ள ஒலிபரப்பிகளின்முன் எடுத்துக்கூறியபடியேநிற்கின்றனர் தேவ அன்னையின் திருத்தொண்டர்களாகிய குருமார்.

"பிரியமான சகோதரர்களே ! குடும்பசெபமாலையை மறவாதீர்கள். நாம்முன்பு குடும்பசெபமாலைப்பக்தியை வளர்ப்போமென்று எடுத்துக்கொண்ட உறுதியான வாக்குத்தத்தத்தைத் தேவதாயின் மாதமாகிய இம்மாதத்தொடக்கத்தில் புதுப்பியுங்கள். ஒன்றித்துச் செபிக்கும் குடும்பமே ஒற்றுமையாகவாழும் ... என்று எந்தக்கோவில்களுக்குச்சென்றாலும் ஆங்காங்கு கட்டளைக்குரவர்களின் பிரசங்கங்களின் முதற்பகுதி மேற்கூறிய வசனங்களாகவே இருக்கின்றன. கத்தோலிக்கராகவிருக்கின்ற நாம் எமது இராக்கினியும், அன்னையுமான தேவதாயின் நாமத்தைக் குடும்பங்களிலிருக்கும் யாவரும் தத்தம்இல்லங்களில் ஒன்றுகூடி வாழ்த்துவோமாக ! எவ்வித துன்பதுரிதங்கள் தோன்றியபோதும் அவைகள் யாவற்றையும் மறந்து மாலை ஆறுமணிக்குத் "திருந்தாதி" மணியின்ஒலி எமதுகாதிற்தொனித்ததும், தேவதாயின் சுரூபத்தின்முன் முழந்தாட்படியிட்டு எல்லோரும் ஒன்றுகூடிக் குடும்பம்குடும்பமாகத் தேவதாயின்நாமத்தை அவர்எமக்கு அருளிய பரிசுத்தசெபமாலையின் மூலம் புகழுவோமாக ! தேவதாயின் நாமம் எங்கும் என்றும் புகழப்படுவதாக ! காலை மாலை செபமாலை நாம் ஓதிவரக்கருணைசெய்வாயே மோட்சகன்னிகா இரத்தினமே !

---

## தேளும் தேரையும்

ஒருவீட்டின் கொல்லையில், சிறுவளையில் ஒருதேளும், ஒருதேரையும் சேர்ந்து வாழ்ந்துவந்தன.

தேளுக்கு எப்பொழுதுமே தன்மீது ஒருகர்வம் ; தன்னிடம் விஷக்கொடுக்கு இருக்கிறது ; இதனுல் மனிதர்களோ, இதரபிராணிகளோ தன்னைக்கண்டால் விலகிஓடுகிறார்கள் ; தனக்கு ஆபத்தில்லை என்பது அதன் எண்ணம்.

தேரைகள் அப்பாவி ! அதற்கு இந்தவிஷயத்தில் நம்பிக்கை கிடையாது. இந்த விஷக்கொடுக்கொன்றும் நம்மைக் காப்பாற்றப்போவதில்லை ; பிறருக்குத் தீமைசெய்யாமையே நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நல்ல வழிஎன்று அதுநம்பிவந்தது.

ஒருநாள் மாலையில் வீட்டுச்சிறுவர்கள் கொல்லையில் விளையாடவந்தபொழுது இரைதேடவெளியேவந்த தேரையைக் கண்டுவிட்டனர். அது தாவித்தாவிக்குதிப்பது அவர்களுக்கு வேடிக்கையாயிருந்தது. கல்லால் அடித்துத்துரத்தினர். பயந்துபோன தேரை தன்பிராணனைப் பாதுகாத்துக்கொள்ள வளையினுள் ஓடிமறைந்துகொண்டது.

செய்தியை அறிந்ததேள் சினமடைந்து கம்பீரமாகத் தன்வால்கொடுக்கைஆட்டிக்கொண்டு கவட்டைக்கால்களை உயர்த்திக்கொண்டு வெளியே வந்தது. தேளைக் கண்டதும் சிறுவர்கள் பயந்து ஓடிவிட்டனர்.

"பார்த்தாயா ! என்தத்துவம் எவ்வளவு உண்மையென்பதை ? இந்த விஷஆயுதங்கள் நம்பாதுகாப்பு ; எதிரிகளைப் பயந்து ஓடச்செய்கின்றன" என்று மொழிந்தது.

சிறிதுநேரத்தில் வீட்டுக்காரன் சிறுவர்களை அழைத்துக்கொண்டு அங்கேவந்தான். தேள் நுழைந்த துவாரத்தைச் சிறுவர்கள் அடையாளங்காட்டினர். வேலைக்காரன் மண்வெட்டியால் வளையைவெட்டினுன்.

தேரை முதலில் வெளியேதுள்ளியது. அதை நோக்கி மண்வெட்டியை ஓங்கினுன் வேலைக்காரன். "விட்டிடடா அதுபோகட்டும், தரையைவெட்டு ; தேள்வரட்டும்" என்ருன் வீட்டுக்காரன். தேரை தப்பிப்பிழைத்து ஓடியது.

வளையில் இடம்குறுகி மேற்கொண்டு பதுங்கஇடமில்லாததால் கடைசியாகத் தேளும் வெளியேவந்தது. பிரதாபம்பொருந்திய தன் விஷக்கொடுக்கை ஆட்டிக்கொண்டுதான் வந்தது. என்னபயன் ? ஒரேவெட்டு; மண்வெட்டி அதை இரண்டாகப் பிளந்துவிட்டது.

எந்தக்கொடுக்கு எதிரிகளைப் பயமுறுத்தித் தன்னைப் பாதுகாக்குமென்றுஎண்ணி இறுமாந்து வந்ததோ அதையே பலமுறை, துண்டு துண்டாகவெட்டி வீட்டுக்காரன் தன்கோபத்தைத் தணித்துக்கொண்டான்.

வேறொரு வளைக்கு வந்துசேர்ந்த தேரை இப்படித்தான் எண்ணியது. "இதுதான் நமக்குப்பாதுகாப்பு; பிறருக்கு நாம் தீமைசெய்வதில்லை ; அவர்களைப் பயமுறுத்தும் விஷஆயுதங்கள் நம்மிடம் கிடையாது. நாம் கவலையற்று வாழலாம்.

---

### நகைச்சுவை

"நீங்கள் ஏன் மிஸ்றர் மூக்குப்பொடி பாவிக்கிறீர்கள் ?"

"சரியான தடிமன்வருத்தம் மிஸ்றர். அதற்காகத்தான் பொடிபோடுகிறேன்."

(சிலநாட்களின்பின்)

"இப்பொழுது உமக்குத் தடிமன் வருத்தம் இல்லையே. இன்னுமேன் பொடிபோடுகின்றீர் ?"

"ஓ அதுவா ? அதூ... உ... ஊ !...... இனிமேல் தடிமன்வராமற் காப்பாற்றுவதற்காக."

* * *

"குரேப் வெட்டவா—ஷேவ்எடுக்கவா ?"

"குரேப்வெட்டவும், ஷேவ்எடுக்கவும் கூலிஎவ்வளவு ?"

"எழுபத்தைந்து சதம் !"

"தலையை மொட்டையாகச் சிரைத்துச் ஷேவ் எடுக்க ?

"அறுபத்தைந்து சதம் !"

"பத்துச்சதம் கைமேலே ஆதாயம். தலையை மழுங்கச் சிரைத்துச் ஷேவ் எடுத்து விடவும்."

— எஸ். எல். சவுந்தரநாயகம்

---

## மூளைக்கு வேலை

1. வேலைநேரத்தில் வேலைசெய்யாமலும், அதோடு பெரியவேலையும் செய்பவர் யார் ?

2. A, Bயின் பிதா. ஆனுல், B, Aக்கு மகனில்லை. அப்படியானுல் B யார்?

3 ஒரு தியேற்றருக்கு 525 பேர் வந்தார்கள். ஆனுல், அங்கே இருந்த ஆசனங்கள் போதாததால் இவர்களில் உட்கார்ந்தவர்கள்போக மற்றவர்கள் நிற்கவேண்டியதாயிற்று, நின்றவரைப்போல 4 மடங்கு எண்ணிக்கை ஆசனங்களே அங்கிருந்தன. உட்கார்ந்தவர்கள் எத்தனைபேர் ?

4. மனிதனுடைய அங்கஅசைவுகளில் மிகவும் துரிதமாய் வேலைசெய்வது எது ?

5. தங்கம், முத்து, இரும்பு, செம்பு, கோமேதகம் இந்த 5 சொற்களில் 4 சொற்கள் ஏதோஒருவிதத்தில் பொருத்தமாக இருக்கின்றன. ஆனுல், ஒருசொல்லுமட்டும் அவைகளுக்குப் புறம்பாயிருக்கிறது. அது என்ன ?

6. "உன்னிடம் எத்தனை ஆடுகள் நிற்கின்றன ?" என்று ஒரு கமக்காரனைக்கேட்டபொழுது அவன் "நான் வைத்திருக்கும் ஆடுகளின்எண்ணை 2, 3, 4, 5, 6 என்பவற்றால் பிரித்தால் 1மிச்சம் வரும்" என்றால் ஆடுகள் எத்தனை ?

7. கெடிகாரத்தில் இரண்டு முட்களும் ஒன்றின்மேலே ஒன்றாக ஒரு நாளில் எத்தனைமுறை இருக்கும்?

(விடைகள் வேறு பக்கத்தில்)

---

### விடுகதைகள்

1. ஒன்று பொழிகிறது. மற்றொன்று குடிக்கிறது. மூன்றாவதொன்று அதைஉண்டு உயிர்வாழ்கிறது.

2. ஒன்றைஒன்று துரத்திக்கொண்டு ஓடிக் கண்ணுமூச்சி விளையாடுகின்றன.

3. வா வாஎன்று அழைத்துஎன்னைத் தொழுதெழுகிறார்கள். ஆயினும்நான்வந்ததும் ஒதுக்கிடந்தேடி ஒதுங்கிக்கொள்ளுகிறார்கள்.

4. காலுமில்லை, கையுமில்லை. என்றாலும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்துவிடுகிறது.

5. உடலில்லை, உயிர்வாழ்கிறது. நாக்கில்லை, பேசுகிறது. யாரும்அதனைக் கண்டதில்லை ; ஆனுல், அதன் குரல்மட்டும் எல்லோர் காதிலும் விழுகிறது.

(விடை வேறுபக்கத்தில்)

### கண்டுபிடியுங்கள்

1. என்னை நன்குகற்றால், உன்னை உலகறியச் செய்வேன்.

2. என்னைக் கடைப்பிடி, உன் பெயர் உள்ளவரையும் நிலைக்கச் செய்கிறேன்.

3. வேதத்தைக்கற்றுச் சாதனையில்ஒழுகினுல் எதுவளரும் ?

4. என்னை வழித்துணைகொண்டால் நான் உன்னை மேன்மைப்படுத்துவேன்.

5. என்னைச் சுத்தமாய்வைத்திரு. உன்னைச் சித்திபெறச் செய்கிறேன்.

* * *

சரியான விடைகள் : 1. கல்வி. 2. சத்தியம். 3. ஆத்துமம். 4. முயற்சி. 5. இருதயம்.

— பிரான்சீஸ் சென் ஜோச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TYPEWRITER PAPER**

Eminently suitable for making copies on the Typewriter, thin, but strong.

Quarto size, $10\frac{1}{4}'' \times 7\frac{3}{4}''$
Rs. 2-90 per ream of 500 sheets

Octavo size, $9'' \times 5\frac{3}{4}''$
Rs. 1-85 per ream of 500 sheets

*Available at*

**St. Joseph's Catholic Press, JAFFNA**

## அர்ச். வின்சென்ற் டீ போல் தருமசபை

அர்ச். வின்சென்ற் டீ போல் தருமசபைப்பந்திகளின் மூன்றும் காலவருடக் கூட்டம் இம்மதி 13-ந்தேதி ஞாயிறுவாரம் பிற்பகல் 5-30 மணியளவில் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தின் பின் பரிசுத்த கார்மேல்மாதா பந்திச் சாலையில்நடந்தேறும். வண. எல். ஆர். அன்ரன் சுவாமியவர்கள் உபந்நியாசம் நிகழ்த்துவார். அங்கத்தவர் எல்லோரும் அழைக்கப்படுகிறார்கள்.

தனிச்சங்க காரியதரிசி

## மரண அறிவித்தல்

யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்கம் லிமிற்ரெட்

இல. 4, கண்டி ரேட், யாழ்ப்பாணம் — பதிவு இல. M. 110

கீழ்க்காணும் மேற்படி சங்க அங்கத்தவர்கள் மரணத்திரையினுள் மறைந்ததை மிகவும் விசனத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

இறந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மரணசேவைப் பணத்தைச் செலுத்தவும்.

இறந்தவர் இலக்கம்: 2237.
இறந். பெயர்: ஸ்ரீமதி த. சின்னப்பிள்ளை.
விலாசம்: 54, புங்கன்குளம்ரேட், கொழும்புத்துறை. திகதி: 4-10-57.

*

இறந்தவர் இலக்கம்: 2286.
இறந்தவர் பெயர்: க. நாகலிங்கம்.
விலாசம்: கரம்பொன் மேற்கு. திகதி: 6-10-57.

மேலும், 444-ம் இலக்க அங்கத்தவரின் நன்கொடைப் பணம் ரூபா 1474-37 கொடுபட்டது. சந்தா ரூபா 22-75-ம் கொடுபட்டது.

த. இராசரத்தினம்,
கௌரவ காரியதரிசி.

# 20-10-57 ஞாயிறு
# விசுவாசப் பரப்புதல் ஞாயிறு

## 4-ம் வருட
## மரண ஞாபகம்

ஸ்ரீமதி அந்தோனியாப்பிள்ளை மரணத் திரையில் மறைந்த 4-ம் வருடம் 10-10-57 இல் பூர்த்தியாகிறது. இவவுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றுடும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

"மிகவும் மதுரமானயேசுவே! தேவரீர் சிலுவையில் தொங்கும்போது அனுபவித்த அளவில்லாத கஸ்தியைப் பார்த்து இவ்வாத்துமத்தை இரட்சித்து உமது மோட்ச இராச்சியத்தின் செல்வ பாக்கியங்களுக்கும், நித்தியானந்த சந்தோஷத்திற்கும் பங்காளியாயிருக்கக் கிருபை செய்தருளும்."

பத்தா:
பி. நீக்கிலாப்பிள்ளை (தம்பிராசா)

பிள்ளைகள்: அ. இ. அன்னம்மா,
அ. சிசிலியா,
ஞ. மேரி யோசேப்பின்.

பாண்டியந்தாழ்வு.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

என்றும் சகாயம்புரியும் பரிசுத்த சதா சகாயமாதாவே! எனது இளையமகன் தனது சகோதரர்களுடன் சாயந்தர வேளை விளையாடும்போது சென்ற ஆவணித்திங்கள் முற்கூற்றில் காலில்ஓர் சிராம்பேறிற்று. அதை வெகுசுலபமாய் எடுத்தாயிற்று. ஆயின் மாதமுடிவில் அவரின்தோற்றமும் அவயவங்களின் உணர்ச்சிகளும் சிலவேற்றுமையைக் காட்டின. சரீரம்முழுதும் ஓர்விறைப்பு. இருக்கமுடியாது. வாய்திறந்துசாப்பிட இயலாது மிகவும் கஷ்டப்பட்டார். உடனே அநுரதபுர ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் அங்கே அவரைநன்கு பரிசோதித்தபோது (Tetanus) ஏற்புத் தொட்டிருக்கிறதென்றும் அவருடையஉயிரைப்பற்றித் தாம் திடம்சொல்லமுடியாதென்றும் ஆஸ்பத்திரியிலிருந்தே சிகிச்சை பெறவேண்டுமென்றும் வைத்தியஅதிகாரிகள் கூறினர். மகனை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு அருகாமையிலுள்ள அர்ச். சூசையப்பர் ஆலயத்திற்கு நானும் எனது குடும்பமுமாய்ச் சேர்ந்துசென்று அங்கு காட்சியளிக்கும் சதாசகாயமாதாவிடம் எங்கள் மகனின் வருத்தத்தைப் பூரணசுகமாக்கித் தரும்படியாய் மன்றுடினேம். அதே நோக்கமாய் நோவனைப்பூசையும் ஒன்று சொல்லுவித்தோம். தினமும் ஆஸ்பத்திரிக்குப் போகும்போதும், திரும்பும்போதும் ஆலயத்திற்குச்சென்று சதா சகாயமாதாவை மன்றுடிவந்தோம். எனது மகனும் ஓர்படத்தைத் தமது படுக்கையில்வைத்து மன்றுடிவந்தார்.

ஆஸ்பத்திரியில்சேர்த்த 4-ம்நாள் அவருடைய சுகவீனம் ஒருவரும் எதிர்பாராதவிதமாய்க் குறைந்தது. இவருக்குச் சிகிச்சைசெய்த வைத்தியரே ஆச்சரியப்பட்டு "Miraculous Cure" தேவசெயல்எனச் சொன்னர். மகனுருக்குப் பூர்ணசுகமானதும் ஆஸ்பத்திரியால் கொண்டுவரும்போது மாதாவிடம் கொண்டுபோய் அவவுக்குநன்றிசெலுத்தி நன்றியாக ஓர்பூசையும் சொல்லுவித்தேன். அவஎனது மகன் பூரணசுகமடையச் செய்தஉதவிக்காக நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

அவவுடையநாமம் எங்கும்புகழப்படுவதாக. ஈற்றில் எனக்கின்னுமுள்ள இடைஞ்சல்களைநீக்கி மனச்சந்தோஷம் தரும்படி வேண்டிநிற்கின்றேன்.

Nicho.

Rly. Town,
A'pura.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1280

*யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்*

யாழ்ப்பாணம் கொக்குவில்
1. இளையதம்பி புலேந்திரனும்
2. பெண் மகேஸ்வரியும்
— வழக்காளிகள்.

எதிராக

சுதுமலை, கணபதிப்பிள்ளை நாகலிங்கம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1280-ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1957-ம் ஆண்டு கார்த்திகைமீ 9-ந் உ சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1,484|99-ம், இன்னும்ரூபா 1,000/-த்திற்குப் 18-10-56 தொடக்கம் 8-3-57 வரையும் 10% வட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5% வட்டியும், செலவுரூபா 185/17-உம்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோயிற்பற்று, சுதுமலைஇறை கம்புறத்தனை. பர. நி. இ. $10\frac{1}{8}$. பயிர்வகைகளும், வீடும், கிணறும். இந்தப்பரப்புப் பத்தேயரைக்காலுக்கும் எல்லை: கிழக்கு— சந்திரசேகரம்பிள்ளை பெண் செல்லம்மாவின் ஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு—எதிரிக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு — கைஒழுங்கையும், தம்பையா பெண் ஆச்சிப்பிள்ளையின் ஆதனமும். இதில்சொரியலாய் $\frac{3}{8}$ பங்கும், வீடுநிந்தமாகவும், குறித்தகிணறும் அதில் மற்றப்பங்காளருக்கு உரியபங்கு புறநீங்கலாகவும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 4-10-57

---

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள கிழக்குஜேர்மனியிலே அதிகாலைப் பூசையில் பெருந்தொகையான மக்கள் சமூகமாயிருக்கத் தாம்கவனித்ததாகப் பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஓர் தொழிற்கட்சி எம். பி. யான திரு. பொப் மெல்லிஷ் அவர்கள் சமீபத்தில் அந்நாட்டுக்கு விஜயஞ்செய்துவிட்டுத் திரும்பியதும் தெரிவித்திருக்கின்றார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 718

*யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்*

பத்தைமேனி தற்காலம் மட்டக்களப்பு, அல்பேட் லயனல் பெனடிற்
— வழக்காளி.

எதிராக

பத்தைமேனி, காளிப்பிள்ளை கந்தையா
— எதிராளி.

யாழ்ப்பாணம், டிஸ்திறிக்கோட்டின் M. B. 718-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக்காணிகள் 1957-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 14-ந்திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 813/68-உம், இன்னும் ரூபா 500-க்கு 23-12-55 தொடக்கம் 13-11-56 வரையும் 100-க்குப் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்குத் தீர்வைத்திகதிதொடக்கம் இறுபடும்வரைக்கும் ரூபா 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 179 ரூபா 31சதமும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலி கோயிற்பற்று, பத்தைமேனிஇறை ஆலங்கட்டையடி. பர. நி. இல ..$\frac{3}{4}$-உம் செய்பயிர், வான்பயிர்களும், ..களும், கிணறும். எல்லை: கிழக்கு — பத்மநாதன் பெண் கமலாம்பிகைக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — பின்னாற்சொல்லப்படும் 2-ம், 3-ம்காணிகளும், துரையப்பாபெண் இரத்தினத்தின் ஆதனமும். தெற்கு — துரையப்பாபெண் இரத்தினத்தின் ஆதனமும், ஒழுங்கையும். இதடங்கலில் வீடுகள்புறநீங்கலாக மற்ற யாவற்றிலும் சொரியலாய் $\frac{1}{40}$ பங்கு.

2. மேற்படி, பத்தைமேனிஇறை வண்ணன்சீமா. நில. பர. 4..-உம், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — மேலேசொல்லப்பட்ட 1-ம்ஆதனம். வடக்கு — பின்னாற்சொல்லப்படும் 3-ம் காணி. மேற்கு — தம்பையா கைம்பெண் தங்கமுத்துவின் ஆதனம். தெற்கு — துரையப்பாபெண் இரத்தினத்திற்கும், பங்காளருக்கும் உரியஆதனம். இதில் சொரியலாய் $\frac{1}{8}$ பங்கு.

3. மேற்படி, பத்தைமேனிஇறை வண்ணன்சீமா. நில. பர. $7\frac{3}{4}$-உம், வான்பயிர், செய்பயிர்களும், கிணறும், கல்வீடும், மண்வீடும். எல்லை: கிழக்கு — மேலேசொல்லப்பட்ட 1-ம்காணி. வடக்கு— ஒழுங்கை. மேற்கு — காசிப்பிள்ளை இரத்தினசாமிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு — மேலேசொல்லப்பட்ட 2-ம் காணி. இதில்சொரியலாய் $\frac{1}{8}$பங்கு.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம், 4-10-1957

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1219

*யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்*

யாழ்ப்பாணம், நல்லூர்
1. சரவணமுத்து செல்வரெட்டினமும்,
2. பெண் சரஸ்வதியும்.
— வழக்காளிகள்.

எதிராக

கோப்பாய் தெற்கு
1. மருதப்பு சுப்பிரமணியமும்,
2. பெண் பரமேஸ்வரியும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1219-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1957-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,655-உம், இன்னும் ரூபா 1,000-த்திற்கு 7-9-56 தொடக்கம், 22-11-56 வரையும் 100-க்குப் 12%வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்குஇறுபடும்வரைக்கும் 5%வட்டியும், கோட்டுச்செலவு 196 ரூபாவும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோயிற்பற்று, கோப்பாய்தெற்கிறை பள்ளவெளிவயல். நெ. ப. 6 குழி $10\frac{2}{3}$-உம், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — சின்னத்தம்பிபெண் பூரணத்திற்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு — ..சியர் சின்னத்துரைக்கும், சகோதரர்களுக்குமுரிய ஆதனம். மேற்கு —துரைசாமிபெண் தங்கமுத்துவுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு— வரம்பு. பதிவுஇலக்கம் $\frac{170}{271}$.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம். 4-10-57

## விடுகதைகளுக்கு விடை

1. மழையும், மண்ணும், புல்லும்
2. சூரியனும், சந்திரனும்
3. மழை
4. காற்று
5. எதிரொலி

## மூளைக்கு வேலை

**சரியான விடைகள்:**

1. காவற்காரன். 2. B மகள், A தகப்பன். 3. 420 பேர். 4. கண் இமைத்தல். 5. தங்கம், இரும்பு, செம்பு, கோமேதகம்முதலிய நாலும் நிலத்திலிருந்து எடுக்கப்படுகின்றன. முத்து கடலிலிருந்துஎடுக்கப்படுகின்றது. ஆகவே, முத்துதான் விடை. 6. 61 ஆடுகள். 7. 22 முறை.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 10-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org